'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 252 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை (12.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 22, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


# ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டி நடக்காது!

## ஆளுங்கட்சியின் உள்ளகத் தீர்மானம் கசிந்தது

•நமது அரசியல் செய்தியாளர்

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தும் யோசனையை கைவிட ஆளுங் கட்சி தீர்மானித்துள்ளதாக மிகவும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையை கைவிட்டு, அடுத்த ஆண்டு (2024) ஒகஸ்ட் மாதத்துக்குப் பிறகு தேர்தலை நடத்த திட்ட மிடப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆனால், அதற்கு முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்து அடிப்படை அமைப்புப் பணிகளை மேற் கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் தீர்மானித்துள்ளனர். தற்போது வெளியாகியுள்ள தகவல்களின்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகளின் கீழ் போட்டியிடப் போவதாக பலரின் பெயர்கள் விளம்பரப்ப டுத்தப்பட்டு வருகின்றன.

02 பக்கம்



பஞ்சிகாவத்தையில் மரமொன்று வெட்டப்பட்டபோது அதிலிருந்த காக்கையின் கூடும் சிதறிப்போனது. வழமையாக தனது கூட்டில் இருந்தபடி குஞ்சுகளுக்கு இரையூட்டும் காகம், தனது வாழ்விடத்தை இழந்த நிலையில் எஞ்சியிருந்த மரத்தின் அடிப்பகுதியில் இருந்தபடி இரையை ஊட்டும் உணர்வுபூர்வ காட்சி.

(படப்பிடிப்பு: கவிந்தன் சண்முகராஜா)

## மாகாண தேர்தலுக்கு தயாராகுக பெசில் இரகசிய வேண்டுகோள்!



நமது நிருபர்

மாகாண சபைத் தேர்தலொன்றுக்கு தயாராகுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரிடம் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களை கடந்த வாரம் இரகசியமாக சந்தித்த பெசில், இந்தியாவின் வேண்டுகோளுக்கமைய மாகாண சபைத் தேர்தலே விரைவில் நடத்தப்படவுள்ளதாகவும் அதனால் அதற்கு தயாராகுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கமைய, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்கள் சந்திப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

## நாளொன்றில் 355 டெங்கு நோயாளர்கள்

### 25 வீதமானோர் சிறுவர்கள்





•கே. சுபானி

நாட்டில் நாளொன்றுக்கு 355 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளங்காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு நோய் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடுமுழுவதும் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதமானோர் சிறுவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும்...

02 பக்கம்

## பௌத்தத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தாதீர்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு



பௌத்தத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்த வேண்டாம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார். காலியில் நேற்றுமுன்தினம் (10) இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சம்புத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் நம் அனைவரினதும் பொறுப்பாகும். இதற்காக...

02 பக்கம்

## ஜூலையில் ஜனாதிபதி இந்தியாவுக்குப் பயணம்

### பிரதமர் மோடியையும் சந்திக்க ஏற்பாடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். அவர் ஜூலை மாதம் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாட்களில் அந்நாட்டுக்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திப்பதற்கு...

02 பக்கம்

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

•கே. சுபானி

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் 2023ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று (12) ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

02 பக்கம்

## உஷ்



பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதியின் ஆலோசனையின் கீழ் ஏற்று செயற்படுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் மக்கள் சிரமப்படுவதாக கூறும் எதிர்க்கட்சி பாராளுமன்ற குழுவில் ஐ.எம்.எவ்வின் நிபந்தனைகளை ஆதரித்து செயற்படுவதால் மக்கள் கட்சியின் மீது நம்பிக்கையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக பலரும் கட்சித் தலைவர் சஜித்திடம் சுட்டிக்காட்டியுள்ளனராம்.

ரணில் விரித்த வலையில் சிக்கி மக்கள் ஆதரவை இழந்துவிட்டோமென அக்கட்சியின் மூத்த பிரமுகர்கள் புலம்புகின்றனராம்.

## கமெண்ட் கந்தர்...



பதவிக்காலம் முடிய இன்னும் நாட்கள் இருக்கேக்க முன்கூட்டியே தேர்தல் நடத்தி மண்கவ்வ ரணில் ஒன்றும் மஹிந்த இல்லை பாருங்கோ...

## சப்ரகமுவ ஆளுநராக நவீன் நாளை நியமனம்



சப்ரகமுவ மாகாண ஆளுநராக பதவி வகித்த டிக்கிரி கொப்பேகடுவ தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதையடுத்து அந்த வெற்றிடத்துக்கு முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்கவை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவருக்கான நியமனக்கடிதம் நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

டிக்கிரி கொப்பேகடுவ தன்னுடைய ஆளுநர் பதவியை, கடந்த வியாழக்கிழமை (08) இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அடைமழைக்கு வாய்ப்பு

## 07 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறியுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், ஏழு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன் பிரகாரம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி, மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் என திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், புத்தளம், குருநாகல், மாத்தளை, கண்டி,...

02 பக்கம்




# சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்க மூன்றாம் தரப்பு

இதுவரை விநியோகிக்க முடியாதுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை மூன்றாம் தரப்பினர் மூலம் விநியோகிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 850,000 சாரதி அனுமதிப்பத்திரங்கள் மூன்றாம் தரப்பினர் ஊடாக அச்சிட்டு, விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் என்று திணைக்களம் கூறியுள்ளது.

மேலும், விநியோகிக்க முடியாத நிலையிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை மாத்திரம், 6 முதல் 7 மாதங்களுக்குள் மூன்றாம் தரப்பினர் ஊடாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# யூரியா உரத்தின் விலையை மேலும் குறைக்க நடவடிக்கை

அடுத்த பெரும்போகத்திலிருந்து ஒரு மூடை யூரியா உரத்தை 5000 ரூபாவுக்கும் குறைவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நேற்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 22,500 மெற்றிக் தொன் யூரியா உரத்தை பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் யூரியா உர மூடை ஒன்றின் விலையை 9 ஆயிரம் ரூபா வரை குறைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜூலையில் ஜனாதிபதி...

தற்காலிகமாக நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்குச் செல்லும் ஜனாதிபதி ரணில் அந்நாட்டின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவுக்கு வருகை தருவதற்கான அழைப்பை ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் விடுத்திருந்தார். எனினும், இந்தியப் பிரதமருடன் சந்திப்புக்கான நேரம் உறுதிப்படுத்தப்படும் வரை திகதிகள் தாமதமாகின.

இதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் சீனாவுக்கும் ஒக்டோபர் மாதம் அமெரிக்காவுக்குமான விஜயத்தை ஜனாதிபதி ரணில் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைகள்...

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் மே 29ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் கடந்த 08ஆம் திகதி நிறைவடைந்தன.

அதனை முன்னிட்டு, கடந்த மே 26ஆம் திகதி முதல் பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்பட்டது.

இந்நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

### பௌத்தத்தை அரசியல்...

புத்தசாசன அமைச்சு, பௌத்த நிதியம் மற்றும் பல சாசன ஊக்குவிப்பு நடவடிக்கைகள் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு பல்வேறு காரணிகளால் சம்புத்த சாசனம் தற்போது சில பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.

இந்த உன்னதமான சாசனத்தைப் பாதுகாப்பது அனைத்து பக்தர்களினதும் புரோகிதர்களினதும் பொறுப்பாகும்.

மதமும் ஆட்சியும் ஒன்றாகக் கலக்கக் கூடாது. பௌத்தத்தை ஒரு அரசியல் ஆயுதமாக்குவதில், மதம் பெற வேண்டிய உயர்வான அந்தஸ்து குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுகிறது.

சம்புத்த சாசனத்தைப் பாதுகாப்பது வெறும் வார்த்தைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் நடைமுறைச் செயல்களால் அமைய வேண்டும்.

நாடு முழுவதும் உள்ள விகாரைகளில் பல்வேறு தியாகங்களைச் செய்வது, கடினமானதொரு பயணத்தில் ஈடுபட்டுவரும் சம்புத்த சாசனத்தின் காவலர்களாக கருதப்படும் மரியாதைக்குரிய மகா சங்கத்தினரைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும். அதை நடைமுறை யதார்த்தமாக்குவதற்கு அனைவரும் ஒன்றித்து சமமாக பங்களிக்க வேண்டும்.

புத்தபெருமான் போதித்த தசராஜ தர்மத்தின் பிரகாரம் அரசாட்சி நடத்தப்பட்டால் நாடும் இனமும் மதமும் சம்புத்த சாசனமும் பாதுகாக்கப்படும். அந்த இலக்கை அடைவதற்கு செயற்படுவது அனைவரின் பொறுப்பாகும். தற்போது பொய் கோலோட்சி உண்மை மூடிமறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

### ஜனாதிபதித் தேர்தல்...

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இதற்கிடையில், பல கட்சி உறுப்பினர்களின் மாற்றங்கள் குறித்து கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சஜித் பிரேமதாசவுடன் இணைந்து செயற்பட பல சிறு கட்சிகள் முன்வரவுள்ளன. மேலும் பல சிறு கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன.

கட்சித் தலைவர்களான குமார வெல்கம, ரவூப் ஹக்கீம், ஜீவன் தொண்டமான் ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மனோ கணேசன், பழனி திகாம்பரம், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்டோர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாக அறியமுடிகின்றது.

### அடைமழைக்கு வாய்ப்பு...

நுவரெலியா, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.




# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனக் குறைவான செயற்பாடுகள்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டு

வெளிநாட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த மற்றும் விபத்துக்குள்ளான இலங்கையர்களுக்கு இழப்பீடு மற்றும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தனது பொறுப்புகளை நிறைவேற்ற தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கவனக்குறைவாகவும் மெதுவாகவும் செயற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தனது கண்காணிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்தே தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும்போது உயிரிழந்தவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் 2012ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி முற்றிலும் ஊனமுற்ற நபரொருவருக்கு இழப்பீடு கிடைப்பதில் 10 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான வழக்குப்பதிவும் அமைச்சின் அலட்சியப் போக்கினால் பல ஆண்டுகளாக காணாமல் போனதாகவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு குவைத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த போது உயிரிழந்த பெண்ணொருவரின் உடல் உறுப்புகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரியவந்தும் குறித்த மரணம் இடம்பெற்று 10 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரையில் சட்ட வைத்திய அறிக்கை பெறப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாடு சென்றுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகை, ஐந்து கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து 19 ஆயிரத்து 842 ரூபா பயன்படுத்தப்படாத வீடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

ஒரு கோடியே 22 இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்று 75 ரூபா வைப்புத் தொகையை 20 வருடங்களாக மீளப் பெறுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது.

2019ஆம் ஆண்டு மின்சார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 1 கோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனம் மற்றும் 2020ஆம் ஆண்டு மோசடி செய்யப்பட்ட 2 கோடியே 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 வாகனங்கள் குறித்து தகவல்கள், நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற 1583 அமெரிக்க டொலர்கள் திருட்டு சம்பவத்துக்கு இன்றுவரை தீர்வு காணப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

2021 செப்டெம்பர் மற்றும் 2022 நவம்பருக்கு இடையில் அமைச்சு, மூன்று கோடியே 18 இலட்சத்து ஐம்பதாயிரத்து நூற்று அறுபத்து ஒன்பது ரூபா மற்றும் இரண்டு வெளிநாட்டு தூதுக்குழுக்களுக்கான பன்னிரண்டு காசோலைகள் எதற்காக செலவிடப்பட்டுள்ளன என்பது வெளிப்படுத்தப்படவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# தெஹிவளையில் ஒருவர் கொலை

## சந்தேக நபர் தலைமறைவு

தெஹிவளையில் கூரான ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தனிப்பட்ட தகராறு வலுப்பெற்றதில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கூரான ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் காயமடைந்த நபர், களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெஹிவளையைச் சேர்ந்த 69 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, தலைமறைவாகியுள்ள சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# நாடெங்கும் தட்டுப்பாடின்றி எரிபொருள் விநியோகம்

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு இன்றி எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது ட்விட்டர் கணக்கில் பதிவொன்றை மேற்கொண்டு இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் போதுமான எரிபொருள் இருப்புகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த 10 நாட்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் ஓர்டர்கள் எவ்வாறு விநியோகிக்கப்பட்டன என்பது தொடர்பிலும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, நாளாந்த எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெற்று வருவதாகவும் நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு நிரப்பு நிலையங்களிலும் தட்டுப்பாடின்றி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

# 275 கடவுச்சீட்டுகளுடன் கண்டியில் ஒருவர் கைது

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களிடமிருந்து 275 கடவுச்சீட்டுகளை சேகரித்து வைத்திருந்த நபர் ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் இயங்கிவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே கடவுச்சீட்டுகளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக இடம்பெறும் மோசடிகளுக்கு இலக்காக வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# பலவீனமுற்ற நிலையில் புகையிரத சேவைகள்

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு

புகையிரத திணைக்களத்தின் முறையற்ற நிர்வாகத்தால் புகையிரத சேவை பலவீனமடைந்துள்ளது. புகையிரத சேவையை தனியார்மயப்படுத்த வேண்டாம் என்றால் சேவையை நிச்சயம் அதிகார சபையாக மாற்றிமைக்க வேண்டும். திணைக்களம் என்ற நிர்வாக கட்டமைப்புக்குள் இருந்துகொண்டு முன்னேற்றமடைய முடியாது என போக்குவரத்து துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

புகையிரத சாரதிகள் சங்கத்தின் வருடாந்த கூட்டம் கொழும்பில் நேற்று (11) இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

போக்குவரத்து சேவைத்துறையில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இருப்பினும், மாற்றத்தை ஏற்படுத்த மானியம் போதாது. புகையிரத திணைக்களத்தின் வருமானம், செலவு முகாமைத்துவத்தில் நிலவும் பலவீனத்தன்மை ஆகியவை புகையிரத திணைக்களம் நட்டமடைவதற்கு பிரதான காரணியாக உள்ளது. சிறந்த நிர்வாக கட்டமைப்பு இல்லாமல் நிறுவனத்தை முன்னேற்ற இயலாது.

பொது போக்குவரத்து சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து அமைச்சரவை ஊடாக தீர்வு காண தயாராகவுள்ளேன். குறுகிய அரசியல் நோக்கத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் தொழிற்சங்க போராட்டங்களின் பங்குதாரர்களாக புகையிரத தொழிற்சங்கங்கள் ஆளாகக்கூடாது என்பதை வலியுறுத்துகிறேன்.

திணைக்களம் எனும்போது வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. துறைமுக அதிகார சபை, டெலிகொம் நிறுவனம் ஆகியன அபிவிருத்தியடைவதை போல் புகையிரத திணைக்களம் அபிவிருத்தியடைய வேண்டும்.

புகையிரத சேவையாளர்களின் தொழில் மற்றும் ஓய்வூதிய உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிர்வாக கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. புகையிரத சேவையை தனியார் மயப்படுத்த வேண்டாம் எனில் நிச்சயம் புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும். திணைக்களம் என்ற கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு முன்னேற முடியாது என்றார்.

# 75 இலட்சம் பேருக்கு உணவுப் பாதுகாப்பில்லை

## பேராதனை பல்கலைக்கழக ஆய்வில் தகவல்

நாட்டில் சுமார் 75 இலட்சம் மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து அண்மையில் நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சில மாகாணங்களில் சுமார் 88 வீதமான மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துகோரல குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த நாட்டில் உணவுப் பாதுகாப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துகோரள மேலும் தெரிவித்துள்ளார்.

### நாளொன்றில் 355 டெங்கு...

மேற்கொள்ளப்படவேண்டும் என தேசிய டெங்கு நோய் ஒழிப்பு பிரிவின் விசேட வைத்தியர் டொக்டர் நளின் ஆரியரத்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு நேற்று(11) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் 67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதேவேளை, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 25 பேர் உயிரிழந்துள்ளதுடன், 42ஆயிரத்து 961 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கண்டி குருநாகல் மற்றும் புத்தளம் உள்ளிட்ட 06 மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதன்படி கம்பஹாவில் 9ஆயிரத்து 554பேரும் கொழும்பில் 9ஆயிரத்து 143 பேரும் களுத்துறையில் 2ஆயிரத்து 738 பேரும் கண்டியில் 2ஆயிரத்து 445 பேரும் குருநாகலில் ஆயிரத்து 527 பேரும் புத்தளத்தில் 2ஆயிரத்து 625 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 9 ஆயிரத்து 696 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்த நிலையில் இம்மாத ஆரம்ப 10 நாட்களுக்குள் 3 ஆயிரத்து 557 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் - என தெரிவிக்கப்படுகிறது.

இம்மாத இறுதிக்குள் மேற்குறித்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

தற்போது நாட்டில் மழையுடனான காலநிலை நிலவுவதால் நுளம்பு பெருகும் அபாயம் அதிகரித்துள்ளது.

ஆகவே, நீர் தேங்கியிருக்கும் மற்றும் நுளம்புகள் பெருக்கத்துக்கு ஏதுவாக இருக்கும் இடங்களை கண்டறிந்து அவற்றை இல்லாதொழிப்பதன் மூலம் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு மாவட்டத்தில் நுளம்பு பெருக்கம் கணிசமாக அதிகரித்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட மற்றும் கொத்தடுவ பிரதேசங்களில் நுளம்பு பெருக்கம் அதிவேகமாக அதிகரித்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

ஒரு பகுதியில் தொற்று நுளம்புகளின் அடர்த்தியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுட்டெண் கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் கணக்கிடப்படும் வழக்கமான மதிப்பை விட ஐந்து மடங்கு அதிகமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சுட்டெண் மதிப்பு 5வீதமாக இருக்க வேண்டும் என்றாலும் குறிப்பிட்ட சில பகுதிகளில் 25 வீதமாக பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், கொழும்பு மாவட்டத்தில் ஜூன் மாத இறுதிக்குள் டெங்கு தொற்று தீவிரமடைந்து ‘கடுமையான’ தொற்றுநோய் நிலை உருவாகும் அபாயம் இருப்பதாக வைத்தியர் வலியுறுத்தியுள்ளார். அதற்கமைவாக எதிர்வரும் காலங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகும் நிலை காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட சம்மேளன யாப்புக்கு சர்வதேச அங்கீகாரம் அவசியமானது

## முன்னாள் தலைவர் எடுத்துரைப்பு

(ஆ.ரமேஸ்)

உதைபந்தாட்ட சம்மேளன யாப்புக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் அவசியமாகும் என்று இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் ஹுசைன் தெரிவித்தார்.

நுவரெலியா உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நுவரெலியா மாநகரசபை விளையாட்டரங்கில் இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு முறையான சட்டமூலம் உருவாக்கப்பட்டபோது இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்துக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடே சர்வதேச சமூகம் இலங்கைக்கு தடை விதித்ததற்கு முக்கிய காரணமாகும்.

சர்வதேச கால்ப்பந்து மீதான தற்போதைய தடைக்கு முன்னர் சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனம் சில வருடங்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்தது.

எமது உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆரம்ப நிலை அரசியலமைப்பை மாற்றியமைத்து கூடிய விரைவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச தரத்திலான சட்டமூலத்தைக் கொண்டுவருமாறும் கேட்டுக் கொண்டது.

பல தடவைகள் உதைப்பந்தாட்ட சம்மேளனம் சட்டமூலத்தைத் திருத்துவதற்கு முயற்சித்த போதிலும், விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் அமைச்சர் தரப்பினர் கொண்டுவந்த பல்வேறு முரண்பாடுகளையும் வாதங்களையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

2022ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால், சர்வதேச உதைப்பந்து சம்மேளனத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிக்கும்போது அமைச்சினால் கடும்



இழுத்தடிப்பு இடம்பெற்றது. இதுவே சர்வதேச தடைக்கு முக்கிய காரணமாகவும் அமைந்தது.

தற்போதைய இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை விளையாட்டு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், முன்னைய உதைப்பந்தாட்ட சம்மேளனப் பணிப்பாளர் சபையே உத்தியோகபூர்வமானது என்பதை நாம் அரசாங்கத்துக்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

சர்வதேசம் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய சம்மேளனத்தின் யாப்புக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

இது மறுக்கப்பட்டு வருவதனால் உதைப்பந்தாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற நிலை தொடர்ந்தும் நீடித்தால் உதைப்பந்து விளையாட்டில் பிரதேச, மாவட்ட அளவிலான வீரர்களும் பெரும் ஏமாற்றமடையும் வாய்ப்புள்ளது.

இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து இலங்கை உதைப் பந்து சம்மேளனத்துக்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமூலத் தைத் தயாரிப்பதற்கு அனைத்து தரப்பினரின் இணக்கப்பாட்டையும் பெற்றுக்கொள்வதற்கான விரைவான ஏற்பாட்டை அரசாங்கம் மற்றும் விளையாட் டுத்துறை அமைச்சிடம் எதிர்பார்க்கிறோம்.

அதேநேரத்தில், மலையக பிரதேசங்களில் இருந்து தேசிய, சர்வதேச ரீதியில் விளையாடக்கூடிய உதைபந்தாட்ட திறமையான வீரர்களும் பாதிக்கப்படுவதாக உணர்கிறேன் - என்றும் கூறினார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்**: செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். தேவையற்ற பயணங்களால் தொல்லை உண்டு.

**ரிஷபம்**: நீங்கள் எதிர்ப்பார்த்த உதவிகள் உங்கள் நண்பர் மூலம் கிடைக்கும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும்.

**மிதுனம்**: முயற்சித்த தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**கடகம்**: தந்தையின் உடல் நிலையில் கவனம் வேண்டும். பொறுமையோடு அனைத்தையும் கையாளுங்கள்.

**சிம்மம்**: பயணங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது. திடீர் கோபத்தால் மனதில் அமைதி இருக்காது.

**கன்னி**: உறவினர்களுடன் விருந்துண்டு மகிழ்வீர்கள். மனைவியால் நன்மையும் - இலாபமும் உண்டு.

**துலாம்**: பண வருவாய் திருப்திகரமாக அமையும். உடல் நோய்கள் தீரும். வீண் பயம் வேண்டாம்.

**விருச்சிகம்**: வீணான மனக்கவலைகளை விடுத்து, எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சி எடுங்கள்.

**தனுசு**: எதையும் துணிவுடன் செய்ய மாட்டீர்கள். மற்றவர்களை நம்புவதற்கு முன்னர் இரண்டு முறை யோசியுங்கள்.

**மகரம்**: நினைத்த காரியத்தில் வெற்றிவாகை சூடுவீர்கள். குடுபத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும்.

**கும்பம்**: பணம், பொருள் நட்டம் ஏற்படும் நாள். வீண் வாக்குவாதங்களால் தொல்லைகள்.

**மீனம்**: வீண் மனக் குழப்பங்கள் வேண்டாம். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம்.

**திதி** : நவமி மு.ப.10.35 வரை பின் தசமி (தேய்)
**நட்சத்திரம்** : உத்தரட்டாதி பி.ப.1.49 வரை பின் ரேவதி
**யோகம்** : மரண யோகம பி.ப.1.49 வரை பின் அமிர்த சித்தம்
**வார சூலம்** : கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** : பி.ப. 11.51– 12.21 மணிவரை
**ராகுகாலம்** : 7.21– 8.51 மணி வரை
**எமகண்டம்** : 10.21– 11.51 மணி வரை
**குளிகை** : 1.21– 2.51 மணி வரை
**சந்திராஷ்டமம்** : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்** : புனர்பூசம்,விசாகம்,பூரட்டாதி; (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள சுற்றுலாத் துறையின் அதிகபட்ச பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு







நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு சுற்றுலாத்துறையின் அதிகபட்ச பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் 09 ஆம் திகதி ஆரம்பமான (Culinary Art Food Expo 2023) சமையல் கலை மற்றும் உணவுக் கண்காட்சி 2023" இன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். முதற்கட்டமாக நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி வருமானத்தை அதிகரிப்பதே எமது திட்டம் . அதன்படி, நாட்டில் அதிக வருமானம் ஈட்டும் சுற்றுலா வர்த்தகத்தை முன்னெடுப்பதில் நாம் இப்போது கவனம் செலுத்த வேண்டும்.

சுற்றுலாத் துறையில் கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமாயின், அவர்களுக்கு நல்ல சேவையை நாம் வழங்க வேண்டும். அதற்கு பல்வேறு விடயங்கள் இருந்தாலும் மிகவும் கவர்ச்சிகரமானது, இலங்கையின் விருந்தோம்பல் மற்றும் எங்களுடைய தனித்துவமான சமையல் கலையாகும். எனவே, சுற்றுலாத்துறை விரிவுபடுத்தப்படும்போது, நாட்டில் போதுமான சமையல் கலைஞர்கள் இருக்க வேண்டும்.

இன்று நாட்டின் மனித வளம் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறுவதைக் காணமுடிகிறது. தற்போது நம் நாட்டில் போதிய சமையல் கலைஞர்கள் இல்லை. இதன் விளைவாக தேவைக்கேற்ற விநியோகத்தை வழங்குவதற்கான திறன் இல்லை. எனவே, இந்த நாட்டில் ஹோட்டல் துறையில் சமையல் கலைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அரசாங்க ஆதரவை வழங்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

ஆனால், சந்தைத் தேவையை அரசாங்கத்தால் மாத்திரம் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, தனியார் துறையின் பங்களிப்பு இதற்கு இன்றியமையாதது. இதன்போது அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்க அரசு தயாராக உள்ளது.

சமையல் கலை மற்றும் சமையல் கற்கைகளுக்கென புதிய பாடசாலையொன்றை ஆரம்பிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். இதற்கு தனியார் துறையினரும் பங்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மாகாணத்தில் சமையல் கலை மற்றும் சமையற் கற்கை பாடசாலைகளுக்கான கோரிக்கை எழுந்துள்ளது. நுவரெலியா, பண்டாரவளை, எல்ல, தம்புள்ளை ஆகிய நகரங்களில் இவ்வாறான பாடசாலைகளை ஆரம்பிக்க முடியுமென நான் நம்புகிறேன்.

இளம் சமையல் கலைஞர்களுக்குத் தேவையான அறிவை வழங்கவும் நிபுணத்துவம் வாய்ந்த வெளிநாட்டு சமையல் கலைஞர்களின் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளவும் இது ஒரு முக்கிய வாய்ப்பாக இருக்குமென நினைக்கிறேன்.

சமையல் கலைஞர்களுக்கு தரவரிசை முறையை நிறுவுவது காலத்தின் தேவை என்று நான் கருதுகிறேன். அவர்களுக்கு சர்வதேச தரத்திலான "நட்சத்திரம்" அடையாளங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய சுற்றுலாக் கொள்கையைத் தயாரிக்கும்போது, சுற்றுலா அமைச்சுடன் இது குறித்து கலந்துரையாட நான் எதிர்பார்த்துள்ளேன். மேலும், தனியார் தொழில் முனைவோர்களும் இதற்கு ஆதரவை வழங்குவார்கள் என்று நம்புகிறேன். துறைக்குத் தேவையான மனித வளத்தை மேம்படுத்தாமல் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியாது என்பது எனது நம்பிக்கையாகும் என்றார்.

இங்கு உரையாற்றிய இலங்கை சமையல் கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் ஜெராட் மென்டிஸ் கூறுகையில்,

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கொவிட் பரவல் உள்ளிட்ட பிரச்சினைகளால் இந்தக் கண்காட்சியை நடத்த முடியவில்லை.

எனினும், இந்த ஆண்டு கண்காட்சியை நடத்த முடிவுசெய்தோம். அதற்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. கொவிட் உள்ளிட்ட நெருக்கடிகளால் சுற்றுலாத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் இருந்து நம் நாடு மீளுமா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. ஆனால், இன்று யாரும் நினைத்துப் பார்க்காத வகையில் நாடு மிக வேகமாக இயல்பு நிலைக்கு த் திரும்பியுள்ளது. அதற்காக ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நாம் நன்றி கூற வேண்டும் - என்றார்.

CWC Mackie PLC இன் பொது முகாமையாளர் துமிந்த கொத்தலாவல, அப்பீல்ட் இலங்கை தனியார் நிறுவனத்தின் இந்நாட்டுத் தலைவர் அனுருத்த அலுவிஹாரே, S4IG பிராந்தியத் தலைவர் டேவிட் எப்லெட், பெல்வத்த பால் நிறுவனத்தின் பணிப்பாளர் அக்மால் விக்ரமரத்ன, Asriel Marketing Pvt Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஷிரான் பீரிஸ், உலக சமையல் கலைஞர்கள் சங்கத்தின் தலைவர், சமையல் கலை நிபுணர் தோமஸ் குக்லர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய மதுர கீதங்கள் இசை நிகழ்ச்சி ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் இடம்பெற்றது. கூட்டுத்தாபனத்தின் தமிழ் பிரிவு ஆலோசகர் விசாரத கலாபூஷணம் யூ. மகேந்திரனின் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வட மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார். இதன்போது ஜனரஞ்சக பாடகர் எம்.ஏ.எம். முபாரிஸுக்கு மதுர குரல் என்ற சிறப்பு விருதும் தென்றல் FM இன் 5 சிறந்த நேயர்களுக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.**
**(படங்கள்: எம். நசார்)**

# சந்தர்ப்பங்களை தவறவிட்டு நீலிக்கண்ணீர் வடிக்கிறார் மஹிந்த

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை கண்டிருக்க முடியும். அதற்கு சிங்கள தமிழ் தரப்பில் எதிர்ப்பும் இருந்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறான ஒரு வாய்ப்பை தவறவிட்டு தற்போது நீலிக் கண்ணீர் வடிக்கின்றார் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் நாட்டைக் குழப்பாமல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நிபந்தனைகள் விதிக்காது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு ஊடகங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்துக் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதுவித நிபந்தனையும் இன்றி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இரண்டாவது தடவை பதவிவகித்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை 18 சுற்று பேச்சுவார்த்தைக்கு அழைத்து தமிழர் தரப்பு ஏமாற்றப்பட்டதை மஹிந்த மறந்திருக்கலாம். ஆனால் தமிழர்கள் மறக்கமாட்டார்கள்.

தமிழர் தரப்பு முன்வைக்கும் உடனடிப் பிரச்சினைகளை நிபந்தனைகளாக தென்னிலங்கை மக்களுக்கு பொய்ப் பிரசாரம் செய்யும் சிங்கள தலைவர்களால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும் என்பதற்கு மஹிந்த போன்றோரின் அறிக்கைகள் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தமிழர்களின் உடனடிப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணுகின்ற நல்லெண்ண வெளிப்பாட்டை ரணில் அரசாங்கம் நியாயமான முறையில் தீர்க்க முன் வராவிட்டால் தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்க செயற்பாட்டை வெற்றி கொள்ள முடியாது. தென்னிலங்கை மக்களை ஏமாற்றி அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணம் உள்ள இனவாத சிங்கள தலைவர்கள் இருக்கும் வரை நாட்டில் புரையோடிப் போய்யுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சங்கிலிய மன்னனின் 404 ஆவது நினைவு தினம்







யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி தமிழ் மன்னன் 2ஆம் சங்கிலியனின் 404 ஆவது நினைவு தினம் நேற்று யாழில் நினைவுகூரப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் மன்னன் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை சிவசேனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் மதத் தலைவர்கள்,அரச அதிகாரிகள் கல்விமான்கள்,வர்த்தகர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். மேலும் சங்கிலியன் சிலையில் இருந்து ஊர்வலமாகச் சென்ற குறித்த குழுவினர் சங்கிலியன் மன்னனினால் கட்டப்பட்ட யமுனா ஏரியில் மலர் தூவி சங்கிலிய மன்னனுக்காக அஞ்சலியும் செலுத்தினர்.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்



இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com


**2023, ஜூன் 12ஆம் திகதி, திங்கட்கிழமை**

# ட்ரம்ப்பும் அமெரிக்க அரசியலும்!

அமெரிக்காவின் அணுசக்தி இரகசியங்கள் மற்றும் இராணுவத் திட்டங்கள் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய நூற்றுக்கணக்கான இரகசிய ஆவணங்களைத் தவறாகக் கையாண்டதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

37 குற்றச்சாட்டுகளுடன் கூடிய அவர் மீதான குற்றப்பத்திரிகையில், அவர் தனது புளோரிடா எஸ்டேட்டில் உள்ள அறைகளில் அந்தக் கோப்புகளை மறைத்து வைத்திருந்ததாகவும், புலனாய்வு அதிகாரிகளிடம் அந்த கோப்புகள் குறித்து பொய் சொன்னதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்துவதைத் தடுக்க முயன்றதாகவும், அவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

2024இல் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகி வரும் ட்ரம்ப், தன் மீது எந்தத் தவறும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.ஆனால், ட்ரம்ப் மீதான கிரிமினல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவருக்கு சிறைத்தண்டனை கூட விதிக்கப்படும் என சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர்.

டொனால்ட் ட்ரம்ப் மீது நீதித்துறையின் விசாரணையில் பெடரல் கிராண்ட் ஜூரி குற்றச்சாட்டுகளை பதிவு செய்திருப்பது, 2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக முன்னெப்போதும் இல்லாத ஓர் அரசியல் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது.

அமெரிக்க வரலாற்றில் ஒரு முன்னாள் ஜனாதிபதி மீது கூட்டாட்சி அரசு குற்றச்சாட்டுகளை சுமத்துவது இதுவே முதன்முறை. ட்ரம்ப் வழக்கறிஞர்களின் கூற்றுப்படி, குடியரசுக் கட்சியின் தலைவர் உளவுச் சட்டத்தை மீறியது மற்றும் நீதியைத் தடுக்க சதி செய்தது உள்ளிட்ட ஏழு குற்றச்சாட்டுகளை ட்ரம்ப் எதிர்கொள்கிறார். ஆவணங்களைத் திருப்பித் தருமாறு அவர்கள் கோரிய பிறகும் டிரம்ப் வேண்டுமென்றே முக்கியமான ஆவணங்களை மறைத்துவிட்டார் என்றும் புளோரிடாவில் உள்ள அவரது மார்-ஏ-லாகோ இல்லத்தில் தேடுதல் பிடியாணை மூலம் அவை கைப்பற்றப்பட்டதாகவும் அரசு வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையில் ஹிலாரி கிளிண்டன் தனியார் இணைய சேர்வரை பயன்படுத்தியமை தொடர்பாக அவரைக் கடுமையாக சாடிய ட்ரம்ப்புக்கு இது தர்மசங்கடமான சூழ்நிலை. 2016ஆம் ஆண்டில் வயது வந்தோருக்கான திரைப்பட நடிகைக்கு, பேசாமல் அமைதியாக இருப்பதற்கு பணம் கொடுத்தது தொடர்பாக மன்ஹாட்டன் மாவட்ட வழக்கறிஞரால் நடத்தப்பட்ட விசாரணையில் ட்ரம்ப் ஏற்கனவே கிரிமினல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

49 பக்க குற்றப்பத்திரிகையின் மூலம் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக அந்நாட்டு அரசு முதன்முதலாக குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளது. டொனால்ட் ட்ரம்ப் மறைத்து வைத்திருந்த இரகசிய ஆவணங்களில் பின்வருபவை பற்றிய தகவல்கள் இருந்தன என அந்தக் குற்றச்சாட்டுகளில் கூறப்பட்டுள்ளது.

* அமெரிக்காவின் அணுசக்தித் திட்டங்கள்.
* அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஆயுதத்திறன் பற்றிய தகவல்கள்.
* இராணுவத் தாக்குதலுக்கு அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் சாத்தியமான நிலை குறித்த தகவல்கள்.
* ஒரு வெளிநாட்டுத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கக்கூடிய சாத்தியமான திட்டங்கள்.

ஏற்கனவே, ட்ரம்ப் மற்றும் அவரது சகாக்கள் 2020 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மாற்ற முயன்றதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து ஜோர்ஜியாவில் உள்ள ஒரு வழக்கறிஞர் விசாரணை நடத்தி வருகிறார். இதன் மீதான குற்றசாட்டுப் பதிவு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கும் நேரத்தில் கூட்டாட்சி அரசாங்கத்தால் பின்பற்றப்படும் புதிய குற்றச்சாட்டுகள் அவரது சட்ட சிக்கல்களை இன்னும் அதிகமாக்கும்.

தற்போதைய நிலைவரப்படி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்தான் குடியரசுக் கட்சியின் முக்கிய போட்டியாளராக இருக்கிறார். ஆக, ட்ரம்ப் ஒரு முன்னாள் ஜனாதிபதி என்பது மட்டுமல்ல, 2024ஆம் ஆண்டில் பதவியில் இருக்கும் பைடனின் முக்கியமான போட்டியாளராகவும் அவர் இருக்கக் கூடும்.

ட்ரம்ப் ஏற்கனவே அரசியல் ரீதியாக இவற்றைப் பயன்படுத்திவிட்டார். இந்த வழக்குகளை ஜனநாயகக் கட்சியின் பழிவாங்கும் நடவடிக்கை என்று கூறியதோடு, நாட்டை "தீவிர இடதுசாரிகளிடம் ஒப்படைக்க வேண்டாம்" என்றும் தனது ஆதரவாளர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்த வழக்குகளை அரசியல் அணிதிரட்டலுக்குப் பயன்படுத்துவதில் அவர் உறுதியாக இருக்கும் நிலையில், ஏற்கனவே பிளவுண்டு இருக்கும் அமெரிக்க அரசியலை இது மேலும் பிளவுபடுத்தக் கூடும்.

# போரிட்டது போதும்...



**எஸ்.ஸ்ரீதுரை**

சுவாமி சின்மயானந்தர் தம்முடைய கீதைப் பேருரையில், ''ஒருவனுடைய செயல் அது செய்யப்படும் நேரம், சூழல் ஆகியவற்றைப் பொறுத்தே நல்லது என்றும் தீயது என்றும் வகைப்படுத்தப்படும். உதாரணமாக, போர் வீரன் ஒருவன் போர்க்களத்தில் எதிரி நாட்டைச் சேர்ந்த ஒருவனைக் கொன்றால் அது வீரச்செயல் என்று பாராட்டப்படும். அப்போர் வீரனே போரில்லாத காலத்தில் ஒருவனைக் கொன்றால் அது கொலையாகவே கருதப்படும்'' என்கிறார்.

சுவாமி சின்மயானந்தரின் சொற்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக ரஷ்யா - உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான போரின் நிகழ்வுகளை, அப்போரில் பங்குபற்றியவர்களின் வீரசாகசம் என்று நம்மால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. மாறாக, தொடர்ச்சியான போர்க்குற்றங்களின் தொகுப்பாகவே அப்பேரழிவுகளைக் கருதவேண்டியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் கடந்த வருடம் தொடங்கியபோது இப்போர் நீண்ட காலம் நீடிக்க வழியில்லை என்றே இவ்வுலகம் கருதியது. சிறு நாடான உக்ரைன் வல்லரசாகிய ரஷ்யாவிடம் எளிதில் வீழ்ந்துவிடும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், அனைவரின் ஊகத்தையும் பொய்யாக்கிவிட்டு கடந்த பதினைந்து மாதங்களாக இப்போர் தொடர்ந்து வருகிறது.

நீண்ட காலமாகவே ரஷ்யாவை எதிர்க்கின்ற மேற்கத்திய நாடுகள் பலவும் இப்போரில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், பல்வேறு உயர்ரக இராணுவத் தளவாடங்கள், போர் விமானங்கள் உள்ளிட்டவற்றை உக்ரைனுக்கு வழங்கி வருவதன் மூலம் அதன் எதிர்ப்புச் சக்திக்கு வலுவூட்டி வந்துள்ளன.

ஆயினும், தன்னை விட பலம் பொருந்திய ரஷ்யாவை எதிர்க்கின்ற உக்ரைனுக்குதான் அதிகபட்ச சேதம் என்பதை நம்மால் தெளிவாக அறிய முடிகிறது. உக்ரைனைப் பொறுத்தவரை எதிர்த்தாக்குதல், பிடிபட்ட இடங்களை மீட்க முயலுதல் என்ற அளவிலேயே அதன் இராணுவச் செயற்பாடுகள் இருப்பதையும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுவாக, சண்டையிடும் இருதரப்பினரும் தங்களின் எதிர்தரப்பினருக்கு ஆயுதங்கள், உணவு உள்ளிட்டவை கிடைப்பதைத் தடுப்பதற்காகவே சாலைகள், பாலங்கள், விமான ஓடுதளங்கள், துறைமுகங்கள் உள்ளிட்டவற்றை வெடிகுண்டுகள், ஏவுகணைகள் ஆகியவற்றின் மூலம் தகர்ப்பது வழக்கம். இது ஏற்கப்பட்ட போர்நெறியும் கூட.

ஆனால், ரஷ்யப் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஏராளமான குடியிருப்புகள், உணவகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் உள்ளிட்டவை பெரும் சேதம் அடைந்திருப்பதைப் பார்க்கும்போது இதனை போர் சாகசம் என்று நினைக்கவும் தோன்றவில்லை.

இனி எப்போது போர்நிறுத்தம் ஏற்பட்டாலும், உக்ரைன் தேசத்தின் உட்கட்டமைப்புகளை மீளவும் சரிசெய்து அதன் மக்கள் தங்களது இயல்பு வாழ்க்கையை வாழத் தொடங்குவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மேலும், வருங்காலத்தில் உக்ரைனில் மேற்கொள்ளப்படக்கூடிய மறுகட்டமைப்புப் பணிகளுக்குப் பெருமளவு பணம் தேவைப்படும் என்பதுடன், உலக நாடுகள் அனைத்தும் உதவி செய்ய முன்வந்தாலும் உக்ரைன் நாட்டின் உட்கட்டமைப்புகள் பழைய நிலைமைக்கு மீள்வது மிகவும் கடினம் என்றே தோன்றுகின்றது.

ரஷ்யா இராணுவத்திற்கும் ஓரளவு சேதம் ஏற்பட்டுள்ளது எனினும், அவை உக்ரைனின் சேதங்களைப் போன்று பெரியளவில் இல்லை என்பதே நிதர்சனம். இந்நிலையில், ரஷ்யாவின் பிடியிலுள்ள 'நோவா ககோவ்கா' என்ற மிகப்பெரிய அணையின் கட்டுமானம் அண்மையில் தகர்க்கப்பட்டிருப்பது பேரழிவுக்கு வழிகோலியுள்ளது.

டினிப்ரோ அணையின் குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும் 'தி ககோவ்க்' நீர்மின் நிலையத்தின் ஒரு பகுதியான இந்த அணையை உக்ரைன் மக்கள் 'ககோவ்கா கடல்' என்றே பெருமையுடன் அழைக்கின்றனர். இராணுவத் தாக்குதலால் இந்த அணைக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், ரஷ்யாவும் உக்ரைனும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொள்கின்றன.

''ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இந்த அணை இருப்பதால் உக்ரைன் இராணுவம்தான் இதனைத் தகர்த்துள்ளது"என்று ரஷ்ய அதிகாரிகளும், "உக்ரைன் மக்களின் குடிநீர், விவசாயம், மின்சக்தி ஆகியவற்றுக்கான முக்கிய ஆதாரமாக விளங்குவதால் இந்த அணையை ரஷ்ய இராணுவத்தினர்தான் தகர்த்துள்ளனர்'' என்று உக்ரைன் அதிகாரிகளும் கூறி வருகின்றனர்.

உடைந்த அணையிலிருந்து வெளியேறும் பெருவெள்ளம் பல ஊர்களையும் சூழ்ந்துள்ளது என்றும் ஆயிரக்கணக்கான மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் சிரமமான சூழ்நிலை நிலவுவதாகவும் வெளிவரும் செய்திகள் கவலை தருகின்றன. அணையை ஒட்டிய நீர்மின் நிலையம் முழுமையாக பாதிப்படைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. வெள்ளநீரில் மூழ்கி இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்துத் தெளிவில்லாத நிலைமையே தற்பொழுது உள்ளது. எனினும், உயிரிழப்பு அதிகமாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் சென்ற உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, ''ஐக்கிய நாடுகள் அமைப்பும் செஞ்சிலுவை சங்கமும் இப்பேரழிவு நேரத்தில் உக்ரைன் மக்களைக் காப்பாற்ற முன்வரவில்லை'' என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதற்கெல்லாம் மேலாக, உக்ரைனின் ஜபோரிஜியா அணுமின் நிலைய உலைகளை குளிரூட்டுவதற்கு இந்த அணையின் நீரே பயன்படுத்தப்படுவதாகவும், அணைநீர் முழுவதுமாக வடிந்துவிடும் பட்சத்தில் அவ்வுலைகளைக் குளிரூட்டும் பணி பெருமளவில் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுவதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. பன்னாட்டு அணுசக்தி முகாமை இவ்விடயத்தைத் தீவிரமாக கவனிக்கத் தொடங்கியுள்ளது.

இச்சூழலில், நோவா ககோவ்கா அணையை யார் உடைத்திருந்தாலும் அதனைப் பொறுப்பின்மையின் உச்சம் என்றே கூற வேண்டும். கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை சிதைத்துள்ளதுடன், அணுசக்தி நிலையத்தின் செயற்பாடுகளுக்கும் ஊறு விளைவித்துள்ளதன் பின்னணியில் உள்ளவர்கள் மனிதகுலத்தின் எதிரிகளாகவே கருதப்படுவர்.

எந்த விதத்தில் பார்த்தாலும், போர் என்பது அழிவைத் தவிர வேறு எதையும் தரக்கூடியதில்லை. எனவே, உலகத் தலைவர்களும் ஐ.நா.சபை பொதுச்செயலரும் இணைந்து செயற்பட்டு, ரஷ்ய – உக்ரைன் போரை வெகு விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

***(நன்றி - தினமணி )***

## நக்கல் நமசிவாயம்

***கஜேந்திரகுமார் எம்.பியை மரியாதைக்குறைவா பேசிய அதே பொலிஸ் உத்தியோகத்தர், தெற்கிலுள்ள சிங்கள அரசியல்வாதியொருவரை அப்படி பேச ஏலுமோ..?***



## இன்றைய நாளில்...

* 1902 – அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
* 1964 – இன ஒதுக்கலுக்கு எதிராகக் குரல் கொடுத்தவரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவருமான நெல்சன் மண்டேலாவுக்கு தென்னாபிரிக்க நீதிமன்றம் ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்தது.
* 1967 – சோவியத் ஒன்றியம் வெனேரா-4 விண்கலத்தை வெள்ளிக் கிரகத்தை நோக்கி ஏவியது. வேறொரு கிரகத்தின் வளிமண்டலத்துக்குள் சென்று தகவல்களைப் பெற்று பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
* 1991 – மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் 65 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
* 1999 – நேட்டோ தலைமையிலான ஐ.நா. அமைதிப் படை கொசோவோவினுள் நுழைந்தது.
* 2003 – 'தமிழர் விடுதலை இயக்கம்' என்ற அமைப்புக்குத் தமிழக அரசு தடை விதித்தது.

# பல்கலைக்கழகக் கட்டமைப்பின் தரமும் நற்பெயரும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு




இலங்கைப் பல்கலைக்கழகங்கள், ஆசியப் பல்கலைக்கழகங்களின் பட்டியலில் முதன்மையான இடத்தில் இருந்ததாகவும் அந்தத் தரம் மற்றும் நற்பெயரை பல்கலைக்கழகக் கட்டமைப்பில் மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த (09) பிற்பகல் இடம்பெற்ற "CVCD Excellence Awards" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவினால் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படும், "CVCD Excellence Awards" விழாவில் இலங்கைப் பல்கலைக்கழக கட்டமைப்பிலுள்ள நிபுணர்களினால் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் சிறந்த பங்களிப்புகள் மற்றும் சாதனைகள் குறித்து பாராட்டப்பட்டன.

இந்த ஆண்டு விருது வழங்கும் விழாவில், 2022 ஆம் ஆண்டுக்கான மிகச் சிறந்த மூத்த ஆராய்ச்சியாளர் மற்றும் மிகச் சிறந்த இளம் ஆராய்ச்சியாளர் விருதுகள், சுகாதார அறிவியல் மற்றும் சுதேச மருத்துவம், பொறியியல், கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்பம், மானிடவியல், உயிரியல், முகாமைத்துவக் கல்வி, மருத்துவம் மற்றும் பல் மருத்துவம், இயற்கை அறிவியல், சமூகவியல் மற்றும் சட்டக் கல்வி ஆகிய எட்டு துறைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

அதன்படி, பேராசிரியர் பி. ஏ. கே. எஸ். பெரேரா (மொரட்டுவ பல்கலைக்கழகம்), பேராசிரியர் டி. எம். தீப்தி யசந்தாவல (பேராதனைப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் அரோசா சரங்கி அதிகாரம் (கொழும்புப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் சாமன் ரஜீந்திரஜித் (கொழும்புப் பல்கலைக்கழகம்), எல். பி. டி. ஆர். பி. விஜேசுந்தர (களனிப் பல்கலைக்கழகம்) மற்றும் பேராசிரியர் எஸ். பி. கருணாநாயக்க (திறந்த பல்கலைக்கழகம்) ஆகியோர் சிறந்த மூத்த ஆய்வாளர் விருதைப் பெற்றனர்.

கலாநிதி ஏ. என். மதுசங்க (பேராதனைப் பல்கலைக்கழகம்), கலாநிதி கே. கே. அசங்க சஞ்சீவ (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்), கலாநிதி டபிள்யூ. எச். எம். சஞ்சீவ சமரதுங்க (ரஜரட்ட பல்கலைக்கழகம்), வைத்தியர் எம். பி காவிந்த சந்திமால் தயாசிறி (களனிப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் ஏ. சந்தருவன் ரத்நாயக்க (ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) ஆகியோர் மிகச்சிறந்த இளம் ஆராய்ச்சியாளர் விருதைப் பெற்றனர்.

மொரட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் ரங்கிக உமேஷ் ஹல்வத்துர சிறந்த புத்தாக்க விருதைப் பெற்றார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

நம் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 1,70,000 மாணவர்கள் உயர் கல்விக்குத் தகுதி பெறுகின்றனர். அவர்களில் சுமார் 40,000 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறுகின்றனர். மேலும் 30,000 முதல் 40,000 பேர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு செல்கிறார்கள். ஆனால், பல்கலைக்கழகங்களுக்குத் தகுதிபெறும் 40,000 பேருக்கு மேலதிகமாக மேலும் 25,000-30,000 பேரை இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவதற்கான பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகக் கட்டமைப்பு ஒன்று எம்மிடம் உள்ளது. அதேவேளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கீழ் உள்வாங்கப்படாத பல்கலைக்கழகங்களும் உள்ளன. மேலும், இலாபமீட்டும் மற்றும் இலாப நோக்கற்ற பல்கலைக்கழகக் கட்டமைப்பும் உள்ளது. எனவே, இந்த மூன்று முறைகளையும் நடைமுறைப்படுத்துவதா அல்லது ஒரு முறையை உருவாக்கி பல்கலைக்கழகக் கட்டமைப்பை மீட்டெடுப்பதா என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசாங்கம் உதவித்தொகை வழங்குகிறது. மேலும், பல மாணவர்கள் வெளியே சென்று பணம் செலுத்தி உயர்கல்வி பெறுகின்றனர். மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள சரத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.

இது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகளில் செயற்படுத்தப்படுகிறது. சில நாடுகள் மாணவர்களுக்கு கடன் வழங்குகின்றன. இன்னும் சில நாடுகள் பொருளாதார நெருக்கடியில் உள்ள மாணவர்களுக்கு உதவிகளை வழங்குகின்றன. நாம் இது குறித்து ஆராய வேண்டும். அதிகபட்ச எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு கல்வியை வழங்கக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் நாம் கவனஞ்செலுத்த வேண்டும். எம்மால் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியாது. ஏனெனில், ஒரு நாடாக முன்னேறிச் செல்லும்போது பொறியியலாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்ட ஏராளமான நிபுணர்கள் நமக்குத் தேவைப்படுகின்றனர்.

மேலும், கல்வியின் தர நிலை மற்றும் தரம் குறித்து நாம் கவனஞ்செலுத்த வேண்டும். அன்று, ஆசியப் பல்கலைக் கழகங்களின் பட்டியலில் நம் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் முதன்மை இடத்தில் இருந்தன. ஆனால், இன்று அந்த நிலை மாறிவிட்டது.

எமது பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை மீண்டும் எவ்வாறு மேம்படுத்துவது என்பதில் நாம் கவனஞ்செலுத்த வேண்டும். நமது பல்கலைக்கழகங்களின் தரம் மற்றும் நற்பெயரை உலகுக்கு எவ்வாறு மீண்டும் உறுதிப்படுத்துவது என்பதை நாம் கண்டறிய வேண்டும். இதன் மூலம் உலகின் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களை நமது பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்க முடியும் என்றார்.

இந்நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டி. மங்களேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தியதுடன், இலங்கை உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழு உறுப்பினர்கள், விருது பெற்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இருவருக்கு எச்.ஐ.வி. தொற்று

## வவுனியாவில் இனங்காணப்பட்டதாக சுகாதாரப் தரப்பினர் தகவல்




வெளிநாடொன்றிலிருந்து வருகை தந்த இருவர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியிருப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்த நிலையில், குறித்த இருவரும் வவுனியாவில் எச்.ஐ.வி. தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே இவர்கள் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங்காணப்பட்ட இருவரும் ஆண்களாவர்.

வவுனியா மாவட்டத்தில் எச்.ஐ.வி. சிகிச்சைப் பிரிவு 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடந்த டிசம்பர் வரை 30 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களுள் சிகிச்சைக்கு பிந்திய நிலையில் வந்தவர்கள் மற்றும் சீராக சிகிச்சை பெறாத 7 ஆண்களும் 5 பெண்களுமாக 12 பேர் இறந்துள்ளனர்.

ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது அடையாளம் காணப்பட்டவர்களுக்கும் அதற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதாரத் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

# நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலின் ஒன்றுகூடல்



நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் வழங்கும் மாதாந்த செவ்வழி நயன நட்பெழுச்சி ஒன்றுகூடல் நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை(11) இடம்பெற்றது.

காலை 8.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை இடம்பெற்ற இந்நிகழ்வில் வயது வேறுபாடின்றி அனைத்து சைவ நல்லுள்ளங்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது மாலைகட்டுதல், கோலம் போடுதல், விவாத மேடைகள், சமய சுற்றுலா, தோரணம் கட்டுதல், வித்தியாசமான பிரசாத வகைகள் தயாரித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் இந்நிகழ்வானது சைவ சமய தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் கலாசார கோட்பாடுகளையும் எதிர்கால சந்ததியினருக்கு கடத்துவதற்கு ஊன்றுகோலாக அமையுமென்பதில் ஐயமில்லை.

# 'கள்' விற்பனை நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றவும்!

## வேட்டையா முறிப்பு கிராம மக்கள் போராட்டம்



*(மன்னார் நகர் நிருபர்)*



மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையா முறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள 'கள்' விற்பனை நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு கோரி மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் உள்ள 'கள்' விற்பனை நிலையத்தினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் 'கள்' விற்பனை நிலையத்தை மையமாக வைத்து குறித்த பகுதியில் வேறு போதைப் பொருள் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்த மக்கள் எனவே சம்பந்தப்பட்டவர்கள் குறித்த நிலையத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற அடம்பன் பொலிஸார் அடம்பன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரை தொடர்பு கொண்டு அவர் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டார்.

இதனையடுத்து மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தவர் 'கள்' விற்பனை நிலையத்தை மூடுவதாகவும் உறுதியளித்துள்ளார்.

# நிலத்தடி நீரின் தரம் குறைவடைந்துள்ளதால் சுகாதார பாதிப்புகளை ஆராய நடவடிக்கை

## அமைச்சர் ஜீவனுடன் சீன ஆராய்ச்சி, விஞ்ஞான அக்கடமி கலந்துரையாடல்



இலங்கையில் நிலத்தடி நீரின் தரம் குறைவடைந்துள்ளதால் மக்களுக்கு சுகாதார ரீதியில் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு கொள்வதற்கான ஆய்வு நடவடிக்கையை பரந்தளவில் மேற்கொள்வது தொடர்பிலும் தீர்வுகளைப் பெறுவது சம்பந்தமாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐ.நாவின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நாட்டில் நீர் மற்றும் சுகாதாரத்தை உகந்த மட்டத்தில் பேணுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தேசிய முயற்சியை வலுப்படுத்துவதற்கு அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் சீன ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான அக்கடமியால் நாட்டில் பல விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (11) நீர் வழங்கல் சபையின் புதிய கட்டடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறப்பு அதிதிகளாக சீன ஆராய்ச்சி மற்றும் அறிவியல் அக்கடமி பேராசிரியர் Min Yang>, பேராசிரியர் Wei Yuansong , பேராசிரியர் Yawei Wang உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இலங்கையில் குடிநீரின் தரத்தை மேம்படுத்துவதற்காக உலகின் அதியுயர் தொழில்நுட்பத்தை வழங்கி, அனைத்து வசதிகளுடனும் கூடிய ஆய்வு கூடங்கள், புதிய ஆராய்ச்சி சாதனங்கள், சுத்திகரிப்பு இயந்திரங்கள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்குகின்ற சீனாவின் நடவடிக்கைக்கு அரசின் சார்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நன்றி தெரிவித்தார்.

சீன - இலங்கை கூட்டு நீர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எமது நாட்டில் நீர் வழங்கல் மற்றும் நிலத்தடி நீர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையில் குடிநீரின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைக்கு இலங்கை மக்களின் சார்பில் சீனாவுக்கு அமைச்சர் மேலும் நன்றி தெரிவித்தார்.

# தடுப்புக்காவலிலிருந்த மூன்று சிறுமிகள் தப்பியோட்டம்

*(அநுராதபுரம் செய்தியாளர்)*

கெக்கிராவ, மடாட்டுகம நகரில் அமைந்துள்ள தடுப்புக்காவல் மத்திய நிலையத்தில் இருந்த சிறுமிகள் மூவர் தப்பிச்சென்றுள்ளதாக மடாட்டுகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 10 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மடாட்டுகம பொலிஸார் குறிப்பிட்டனர். நீதிமன்றத் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறுமிகள் மூவரே தப்பிச்சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவர்கள் 15,16,17 வயதுகளையுடைய தலாவ, கலன்பிந்துனுவெவ மற்றும் நொச்சியாகம பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## பஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல்

# சந்தேகத்தின்பேரில் 3 சிறுவர்கள் கைது

*(அநுராதபுரம் செய்தியாளர்)*

அநுராதபுரம் நகரில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் மீது கற்களால் தாக்கி சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சிறுவர்களை அநுராதபுரம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று(11) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து மேற்படி மூன்று சிறுவர்களும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அநுராதபுரம், கம்பிரிகஸ்வெவ மற்றும் அசரிக்கம பகுதிகளைச் சேர்ந்த 15,16,17 வயதுகளையுடைய சிறுவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அநுராதபுரம் திசாவெவ, நீராவிய பகுதியிலுள்ள சிலருக்கும் கைது செய்யப்பட்டுள்ள சிறுவர்களுக்குமிடையில் முன்னர் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் பின்னணியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.06.10
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| Lottery | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5141 | ரூ. 11,625,376.00 | S | 9 7 2 6 5 9 |
| கொவிசெத | 3383 | ரூ. 61,671,762.00 | C | 05 38 63 72 |
| ஜாதிக சம்பத | 1596 | ரூ. 12,255,983.12 | ரிஷபம் | 4 7 6 0 5 3 |
| தன நிதானய | 1171 | ரூ. 94,340,246.00 | A | 23 34 37 53 |
| ராசி சுப பலன் (Handahana) | 450 | ரூ. 3,308,897.00 | மிதுனம் (விசேட இலக்கினம்: மிதுனம்) | 01 18 45 58 |
| Mega Power | 1489 | ரூ. 328,663,754.00 | G (சுப்பர் இலக்கம் 15) | 18 44 55 58 |

Mega Power: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.06.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| Lottery | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5140 | ரூ. 11,591,354.00 | T | 7 7 1 2 7 1 |
| கொவிசெத | 3382 | ரூ. 61,497,383.20 | F | 01 06 40 73 |
| ஜாதிக சம்பத | 1595 | ரூ. 12,255,983.12 | துலாம் | 8 2 2 1 1 9 |
| தன நிதானய | 1170 | ரூ. 94,130,403.60 | G | 21 45 65 66 |
| ராசி சுப பலன் (Handahana) | 449 | ரூ. 3,287,935.60 | மகரம் (விசேட இலக்கினம்: மகரம்) | 06 14 16 38 |
| Mega Power | 1488 | ரூ. 328,326,394.00 | V (சுப்பர் இலக்கம் 04) | 27 39 44 65 |

ஜாதிக சம்பத 1595: லக் ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 5 0 4 4 3; தேலத் ஷபதி அதிர்ஷ்ட இலக்கங்கள்: 0 7 2 9 3 1 9 / 1 0 9 6 7 0 0 / 1 1 0 4 1 9 5 / 1 1 0 4 8 7 4 / 0 5 0 8 4 0 3

Mega Power: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# ஒடுக்குமுறைகளுக்கு எதிராக யாழில் சுயமரியாதை நடைபயணம்






யாழ்.நிருபர்

சகலவிதமான ஒடுக்குமுறைகளுக்கெதிராகவும் LGBTQIA+ சமூகத்திற்கு எதிரான பாகுபாடுகளைப் பற்றி வலியுறுத்தியும் சுயமரியாதை நடைபயணம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சுயமரியாதை மாதத்தை முன்னிட்டு 'யாழ். சுயமரியாதை வானவில் பெருமிதம் – 2023' நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக, ' இச்சமூகத்தில் வாழும் அனைவருமே சமூகப் பொறுப்புடையவர்கள்' என்பதை வலியுறுத்தும் முகமாகவும், LGBTIQA+ சமூகத்தினரையும் சக மனிதர்களாகக் கருதுவதுடன் அவர்கள் தமது வாழ்வை வாழ்வதற்கான உரிமைகளை மதிப்பதுடன் ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தாத வாழ்தலை நோக்கிய பயணத்தின் ஓர் அங்கமாக சுயமரியாதை நடைபயணம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்த நடைபவனி, யாழ். பேருந்து நிலையம் முன்னாலிருந்து கடந்த சனிக்கிழமை (10) காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி, முத்திரைச் சந்தியை நோக்கிப் பயணித்து பண்ணை வீதியூடாக, பொது நூலகத்தை அடைந்து வைத்தியசாலை வீதி ஊடாக நகர்ந்து, ஆரிய குளத்துக்கு முன்பாக நிறைவடைந்தது.

குறித்த நடைபவனியில் பலரும் தன்னார்வமாகப் பங்கேற்றதுடன் யாழ்ப்பாணம் கேகேபி இளைஞர் கழகமும் ஆதரவு வழங்கியிருந்தது.

# 33 வருடங்களின் பின் காணிகள் விடுவிப்பு



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை வைரவர் ஆலயம் மற்றும் அதனைச் சூழவுள்ள சில பகுதிகள் 33 வருடங்களின் பின்னர் மீளக் கையளிக்கப்படவுள்ளன.

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக J/ 233 கிராம சேவையாளர் பகுதியில் உள்ள மாங்கொல்லை வைரவர் ஆலயமும் அதனைச் சூழவுள்ள தனியார் காணிகளிலுமிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

மிக விரைவில், அவை மக்களிடம் உத்தியோக பூர்வமாக க் கையளிக்கப்படவுள்ளன.

# யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் முன்மாதிரியான செயற்பாடு

## பண்ணைப் பகுதியில் சுத்தப்படுத்தும் நடவடிக்கை



யாழ்.நிருபர்

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் யாழ். பண்ணைப் பகுதியைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பண்ணைப் பகுதியில் அதிகளவிலான பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் நிறைந்துள்ள நிலையில், யாழ்ப்பாண மாநகர சபையினர் குறித்த பகுதியைச் சுத்தப்படுத்தத் தவறியதன் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாண பொலிஸாரினால் குறித்த பகுதியை சுத்தப்படுத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் பொலிஸ் உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்டு யாழ். மாநகர சபையின் சுகாதார ஊழியர்களின் உதவியுடன் அகற்றப்பட்டன.

நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமான யாழ்ப்பாண பண்ணைப் பகுதியைச் சுத்தப்படுத்தும் வேலைத் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உயரதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்து கொண்டு சுத்தப்படுத்தும் நடவடிக்கையை மும்முரமாக முன்னெடுத்தனர் .

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பளையில் வீடு புகுந்து திருட்டு

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொற்றாண்ட குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (09) வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் நகை மற்றும் கைத்தொலைபேசிகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி, கொற்றாண்ட குளம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவு வேளை வீட்டின் பின் பக்கக் கதவை உடைத்து உட்சென்ற 06 பேரைக் கொண்ட கும்பலொன்று வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிவிட்டு நகை மற்றும் பணம், கைத்தொலைபேசியை திருடிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் கரிசல் கப்பலேந்தி மாதா ஆலயம் உடைத்து திருட்டு





மன்னார் நகர் நிருபர்

மன்னார் கரிசல் கிராமத்தில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா ஆலயத்தின் கதவுகளை உடைத்து உண்டியல் உட்பட நற்கருணை கிண்ணம் மற்றும் பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இனந்தெரியாத விஷமிகளால் இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை (9) இரவு இடம்பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், சனிக்கிழமை (10) வவுனியா தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதாரச் சுமையுடன் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள்

## மாற்றம் அவசியமென்கிறார் பங்குத் தந்தை பீரிஸ்





கினிகத்தேனை செய்தியாளர்

பெருந்தோட்ட மக்கள் கடுமையான பொருளாதாரச் சுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இருநூறு வருடங்கள் கடந்துள்ள போதிலும், அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க சாத்தியமான செயற்றிட்டங்கள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அனைவரும் ஒன்றிணைந்து மாற்றத்துக்கு வழிசெய்ய வேண்டுமென ஹட்டன் திருச்சிலுவை ஆலயத்தின் பங்குத் தந்தை நியூமன் பீரிஸ் தெரிவித்தார்.

'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்' என்ற தொனிப்பொருளில் செட்டிக் கரிட்டாஷ் நிறுவனத்தினூடாக மலையக மக்களின் 200 வருட வாழ்வை நினைவுகூரும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஹட்டன் கரிட்டாஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே பங்குத் தந்தை நியூமன் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டுகின்ற ஓர் இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரமானது அவர்களது வாழ்க்கைப் பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ள - மேம்படச் செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றதா என்ற கேள்வி எழுகிறது. இந்த மக்கள் அடிமைகளாக இருப்பதற்கு அரசியலும் அரசியல்வாதிகளுமே காரணம் என்று சொல்லலாம்.

எதிர்காலத்தில் இலங்கையில் வாழ்கின்ற ஏனைய மக்களைப் போன்று பெருந்தோட்ட மக்கள் தலைநிமிர்ந்து சுதந்திரமாக வாழவேண்டுமென்றால் அவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகளை -வசதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

அரசியல்வாதிகளோடு இணைந்து செயற்படக் கூடிய நிலை அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அடுத்ததாக, கல்வியில் இந்த மக்கள் உயர்வடையும் பொருட்டு சகல வசதிகளையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகள் எல்லா மக்களுக்கும் சரிசமமாகக் கொடுப்பது போல இந்த மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். இந்த மக்களும் ஏனைய மக்களுடன் இணைந்து வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்

இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்தப்படாவிட்டால் 200 வருடங்கள் அல்ல, எத்தனை வருடங்கள் சென்றாலும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை - என்றார்.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு






செ.திவாகரன்

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அறப்பணியூடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் பொருளாதார ரீதியில் சவாலை எதிர்நோக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் நுவரெலியாவில் வழங்கப்பட்டன.

நுவரெலியா, கந்தப்பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா 25 கிலோ அரிசி 25 கிலோ மா என்ற அடிப்படையில் இப்பொதிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் ஸ்ரீமான் இரா.விஜயபாலன்ஜி, இந்து ஸ்வயம் சேவக சங்க செயற்றிட்ட இணைப்பாளர் சாந்தகுமார்ஜி ஆகியோர் தலைமையில் இப்பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாக சபைத் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

# ஆசிரிய நியமனங்களில் எழுந்துள்ள சர்ச்சைகளைத் தீர்க்க பேச்சுவார்த்தை

## ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் ஆனந்தகுமார் தெரிவிப்பு



விரைவில் வழங்கப்படவுள்ள ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பட்டதாரிகள் மற்றும் கல்லூரி பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், இவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் பிரதேசங்கள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. கேகாலையில் உள்ளவர்களுக்கு குருநாகலையில், புத்தளத்திலும் வேறு மாட்டவங்களிலும் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று இரத்தினபுரி உட்பட மலையக மக்கள் வாழும் ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு ஏனைய மாகாணங்களில் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறு நியமனங்கள் வழங்கப்படுவது பொருத்தமற்றது. வெளிமாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்படுவதால் அவர்களுக்கு ஏற்படும் செலவுகள் அதிகமாகும். அதேவேளை, அவர்கள் தங்கள் குடும்பங்களையும் பார்க்க வேண்டிய சூழல் காணப்படுகிறது.

ஆகவே, அவர்களுக்கு அருகாமையிலுள்ள பாடசாலை அல்லது அந்தந்த மாவட்டங்களில் நியமனம் வழங்கப்படவேண்டும். இந்த நெருக்கடியான சூழலில் அதுதான் பொருத்தமாக இருக்கும். இது குறித்து ஜனாதிபதி மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளேன். விரைவில் இது தொடர்பில் சாதகமான பதில் கிடைக்குமென நம்புகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கதிர்காம யாத்திரைக் குழு மஸ்கெலியாவிலிருந்து பயணம்



மஸ்கெலியா செய்தியாளர்

கதிர்காம யாத்திரைக் குழுவினர் மஸ்கெலியாவிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை பயணத்தை ஆரம்பித்தனர்.மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்தில் விசேட பூஜைகளின் பின்னர் முப்பதுக்கும் மேற்பட்ட பக்தர்கள் நடை பயணமாக யாத்திரையை ஆரம்பித்தனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி கதிர்காமக் கந்தன் ஆலய கொடியேற்ற நாளில் அங்கு சென்று வழிபாடுகளை அவர்கள் நடத்தவுள்ளனர். அங்கு திருவிழா நிறைவடையும் வரை சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளதாக பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



சப்ரகமுவ மாகாண ஆளுநர் பதவியை இராஜிநாமா செய்த டிக்கரி கொப்பேகடுவ பெல் மதுளை கௌத்த மகா விகாரையில் ஆசிபெற்றார்.
(படப்பிடிப்பு: ஏ.ஏ.எம். பாயிஸ்)



வத்தளை,ஹுணுப்பிட்டிய அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயத்தின் 21 ஆவது வருஷாபிஷேக அலங்கார இரதோற்சவம் நேற்றுமுன்தினம் மாலை பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. சி.சோதிரத்தினக் குருக்கள் தலைமையில் விஷேட வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆலய பரிபாலன சபையின் தலைவர் டீ.கனகேஷ்வரன் மற்றும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# இலங்கையின் அபிவிருத்திக்கு இளைஞர்-யுவதிகளின் பங்களிப்பு அவசியம்

## இலங்கைக்கான பலஸ்தீன உயர்ஸ்தானிகர்



(இக்பால் அலி)

இலங்கையின் அபிவிருத்திக்கு இளைஞர் - யுவதிகளின் பங்களிப்பு அவசியமாகுமென்று இலங்கைக்கான பலஸ்தீன் நாட்டின் உயர்ஸ்தானிகர் கலாநிதி சுஹைர் ஹம்துல்லாஹ் தார் செய்த் தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி நடத்திய கண்டி மாவட்டத்திலுள்ள இளைஞர்- யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி அக்குறணை மீஸானிய்யா கல்வி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் லக்மான் சஹாப்தீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்நிகழ்வில் இலங்கைக்கான சவூதி அரேபியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் அப்துல்லாஹ் அப்துல் அஸீஸ் ஒக்குபி, அக்குறணை மீஸானிய்யா கல்வி நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகத் தலைவருமான இம்தியாஸ் பாக்கீர் மக்கார், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் உப தலைவர்களான சாம் நவாஸ், பௌஸர் பாரூக், முன்னாள் செயலாளர் வைஸ் மற்றும் கண்டிக் கிளையின் தலைவர் மேஜர் அப்துர் ரஹ்மான், ரம்ஸி ராசிக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறைப் பேராசிரியர் எம். டி. எம் மஹீஸ், பாராளுமன்ற சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகஸ்தர் முஹமட் அஜ்வர்தீன், வளவாளர் சம்ரீன் சரூக் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.



"பட்ட செட் எக்க" எனும் நாடகம் கொழும்பு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை(09) மாலை மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வில் விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் நாலக ரத்னாயக்க உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# மாணவியொருவருக்கு துவிச்சக்கர வண்டி



சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை மற்றும் சங்கரத்தை அம்பாள் அறக்கட்டளை ஆகியன இணைந்து மாணவியொருவருக்கு துவிச்சக்கர வண்டியை அன்பளிப்பாக வழங்கின.

சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையின் இயக்குநர் ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையினர், சங்கரத்தை அம்பாள் அறக்கட்டளையினர் மற்றும் பயனாளி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தடை விதிக்கப்பட்ட பொருட்களை

# அவுஸ்திரேலியாவுக்குள் கொண்டு சென்ற நான்கு பேருக்கு அபராதம்



அவுஸ்திரேலியாவுக்குள் கொண்டு செல்லத் தடைவிதிக்கப்பட்ட பொருட்களை மறைத்து எடுத்துச் சென்ற நான்கு பேருக்கு 22,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டவர்களுள் இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவதாகத் தெரியவருகிறது. குறித்த இலங்கையர் மே 16 ஆம் திகதி சிட்னி விமான நிலையத்தில் வசமாகச் சிக்கியுள்ளார். அவர் ஒடியல் மா, வாழைப்பழம், வெற்றிலையுடன், சில தாவர தண்டுகளையும் மறைத்து எடுத்துச் சென்றுள்ளார்.

மேற்குறித்த குற்றத்துக்காக இலங்கையருக்கு 5,500 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையர் தவிர, வியட்நாம், பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மேலும் 3 பயணிகளிடமும் தண்டம் அறவிடப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக தாவரங்களை அவுஸ்திரேலியாவுக்குள் எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் கடந்த ஆண்டு விலங்குகளில் நோய்த் தொற்று கண்டறியப்பட்டதிலிருந்து அவுஸ்திரேலியாவின் உயிரியல் பாதுகாப்பு அதிகாரிகள் மிகுந்த அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் விலங்கு வைரஸ் பரவினால் பல்லாயிரக்கணக்கான பில்லியன் டொலர்கள் அழிக்கப்படலாம் என அவர்கள் கருதுகிறார்கள். ஆபத்தான பக்டீரியாக்கள் மூலம் விவசாயத்துறை பாதிக்கப்பட்டால் 11 பில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்படுமென மதிப்பிடப்படுகிறது.

உயிரியல் பாதுகாப்பு சட்டங்கள் கடந்த ஆண்டு இறுதியில் திருத்தப்பட்டன. இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் அதிகபட்ச அபராதம் 5,500 டொலர் ஆக உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அமுத விழாவை முன்னிட்டு ஐந்து கல்விமான்களுக்கு முனைவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரனி நடராஜா காண்டீபன் தலைமையில் வெள்ளி, சனி, ஞயிறு ஆகிய தினங்களில் இடம்பெற்ற அமுத விழா நிகழ்வின்போது இயல் முனைவர் பட்டங்கள் பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் சி.பத்மநாதன், சாகித்தியரத்ன டாக்டர் தி ஞானசேகரன், ஜனாதிபதி சட்டத்தரனி முனைவர் கனக ஈஸ்வரன், முனைவர் செல்வி திருச்சந்திரன் ஆகியோருக்கு தமிழ்ச் சங்கத்தின் தலைவரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் :அஷ்ரப் ஏ.சமத்)



யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய கொடியேற்றம் கடந்த வெள்ளிக்கிழமை(09) மாலை இடம்பெற்றது.

# அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாரில்லை

## நாமல் எம்.பி.



அரச நிர்வாகத்தினால் எடுக்கப்படும் சில கொள்கைத் தீர்மானங்களை தாம் ஏற்றுக்கொள்ளாததால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாராக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், அரச நிர்வாகத்தினால் எடுக்கப்படும் சில கொள்கைத் தீர்மானங்களை தாம் ஏற்றுக்கொள்ளாததால் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாராக இல்லை.இவ்வாறான சூழ்நிலையில் ஒரு இலாகாவை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதை தேர்தல் நெருங்கும் வேளையில் அறிவிக்கும்.

ஒரு வருடத்துக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டமை எவ்வாறு எதிர்பாராததோ அதேபோன்று எதிர்காலத்தில் எதுவும் நடக்கலாம் என்றும் கூறினார்.



தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வா நினைவு தினம் கொழும்பு, ஜிந்துப்பிட்டி நீதிராஜா மண்டபத்தில் எஸ்.ரவீந்திரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. மன்றத்தின் பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் கௌரவிக்கப்பட்டதோடு பல்துறைசார்ந்தோருக்கும் தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டு 33 வருட நினைவுதினம்




(பாறுக் ஷிஹான்)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டு 33 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஷ்டிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் முன்பாகவுள்ள நினைவுத் தூபியில் ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது.

குறித்த நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜே.ரத்னாயக்க உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸார், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1990ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்ட பொலிஸார் உட்பட யுத்தத்தினால் உயிர்நீத்த மற்றும் கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இது தவிர, நிகழ்வின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறியினால் அரைக்கம்பத்தில் பொலிஸ் கொடி ஏற்றப்பட்டதுடன் உயிர்நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# விவசாயிகள் 350 பேருக்கு நீர்ப்பம்பி வழங்கி வைப்பு





(கனகராசா சரவணன், அப்துல்சலாம் யாசீம், மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளை நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் வாழை மற்றும் மாதுளை பழ உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நீர்ப்பம்பிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (10) இடம்பெற்றது.

மட்டக்களப்பு, கல்லடி சன்சைன் கிறாண்ட் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, பிரதேச செயலாளர்கள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இணைச் செயலாளர் பிரசாந்தன், மாகாண பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.கருணாகரன் மற்றும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதற்கட்டமாக 350 நீர்ப்பம்பிகள் ஆளுநரால் வழங்கப்பட்டன.

# ‘ஒன்றிணைந்த ஆரம்பக் கல்வி’ நூல் வெளியீட்டு வைபவம்




(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும் நூலாசிரியருமான இராசேந்திரம் வேல்சிவத்தினால் எழுதப்பட்ட ‘ஒன்றிணைந்த ஆரம்பக்கல்வி’ எனும் நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை(11) இடம்பெற்றது.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி த.கணேசரெத்தினம் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக கல்வி, பிள்ளை நலத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செல்லையா அருள்மொழி, இலங்கை திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.ஞானரெத்தினம், அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கி.புண்ணியமூர்த்தி, கௌரவ அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சி.மனோகரன், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி, முன்னாள் உபபீடாதிபதி, விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பயிற்சி மாணவர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மீனவரின் சடலம் கரையொதுக்கம்

(மீராவோடை செய்தியாளர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை(11) சடலமொன்று கரையொதுங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சவுக்கடி கடலில் மீன்பிடியில் ஈடுபடும் 45 வயதுடைய தளவாயைச் சேர்ந்த தங்கராசா விஜயன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்த அதேவேளை, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுவரும் டென்னிஸ் விளையாட்டுக் கூடத்தை அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி மற்றும் இலங்கை டென்னிஸ் சங்கத் தவிசாளர் இக்பால் பின் இஸ்ஹாக் ஆகியோர் சனிக்கிழமை(10) விஜயம் செய்து பார்வையிட்டனர். இதன்போது டென்னிஸ் விளையாட்டுத் துறையின் அபிவிருத்தி மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர், பிரதி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (பாறுக் ஷிஹான்)

# அக்கரைப்பற்றில் குருதிக்கொடை நிகழ்வு

(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)



சர்வதேச குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில் ‘உதிரம் கொடுத்து உயிர் காக்க உதவுவோம்’ எனும் தொனிப்பொருளில் அக்கரைப்பற்று மஸ்ஜிதுல் றகுமான் ஜும்ஆப் பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் சனிக்கிழமை(10) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப்பின் வேண்டுகோளுக்கிணங்க, இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மஸ்ஜிதுல் றகுமான் ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளரும் இரத்ததான ஒருங்கிணைப்பாளருமான ஏ.எச்.எம்.சிபாஸின் நெறிப்படுத்தலில் மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முகாமில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசலின் மதகுருமார்கள், நிர்வாகிகள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கியதுடன் ஆண்கள், பெண்கள் என பெரும்பாலான இரத்தக் கொடையாளர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



AHRC நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஜனநாயக பங்குதாரர்களை ஒன்றிணைத்தல் செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான டிஜிட்டல் ஊடகம் மற்றும் செய்தியாக்கம், அறிக்கையிடல் தொடர்பிலான இரண்டு நாள் பயிற்சி நெறியின் முதல்நாள் நிகழ்வு வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. பயிற்சியின் வளவாளராக எம்.மிருனாளன் கலந்துகொண்டிருந்தார். (கந்தளாய் செய்தியாளர்)




வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் சிரமதான நிகழ்வு சனிக்கிழமை (10) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் கிராம உத்தியோகத்தர் பி.ஜெஸ்மிலா பானு, சமுர்த்தி உத்தியோகத்தர் சீ.எம்.எஸ்.இஸ்மாயில் மேற்பார்வையில் இடம்பெற்ற சிரமதானப் பணியில் பிரதேச சமுர்த்தி பயனாளிகள் கலந்து கொண்டு சிரமதானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (மீராவோடை செய்தியாளர்)



கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு பகுதியில் மின்சார இணைப்பின்றி மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்நிலையில் Real Champion 2k03 மாணவர்கள் மேற்படி மின்னிணைப்பு வசதிகளைச் செய்வதற்குரிய நிதியுதவியை வழங்கினர். மேற்படி நிதியுதவிக்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் சனிக்கிழமை(10) இடம்பெற்றது. (நாவிதன்வெளி செய்தியாளர்)

# ‘உதிரம் கொடுத்து உயிர்காப்போம்’ தொனிப்பொருளில் இரத்ததானம்





(பாறுக் ஷிஹான்)

வைத்தியசாலையில் ஏற்படும் குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக ‘உதிரம் கொடுத்து உயிர்காப்போம்’ எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் சாய்ந்தமருது யூ.எஸ்.எவ்.ஸ்ரீலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் அமைப்பின் தலைவர் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஜி.அன்வர் தலைமையில் சனிக்கிழமை(10) இடம்பெற்றது.

இதன்போது இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர், சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.ஜீ.ஏ.எஸ்.தமயந்தி, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.பி.சரத் சந்திரபால, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.முபாரக் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமிழுள் இலாஹி உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி உட்பட தாதியர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் சாய்ந்தமருது யூ.எஸ்.எவ்.ஸ்ரீலங்கா அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், இளைஞர்கள், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்ததானத்தில் ஈடுபட்டனர்.



பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரின் அழைப்பின் பேரில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன சனிக்கிழமை (10) பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது வைத்தியசாலையின் விடுதி உள்ளிட்ட ஏனைய பிரிவுகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்ட அவர், வைத்தியசாலையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். இதன்போது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் டீ.விஜேசூரிய, ஆரம்ப பராமரிப்பு சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.எஸ்.பி.ரணசிங்க, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் மற்றும் பொத்துவில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பீ.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (பொத்துவில் செய்தியாளர்)

த
கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



## போடியார் புலம்பல்!



வரிசையுகம் மீண்டும் விரைவில் வருமாம் எண்டு பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவத்த சொல்லியிருக்காரு எலுவா..? அவரு சொல்லுறத்த பார்த்தா வரிச யுகத்தால கோட்டாவ மக்கள் துரத்தி அடிச்ச மாதிரி ரணிலயும் துரத்துறத்துக்கு ஒரு வழி பார்க போறாரு போல! எதற்கும் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முந்தி சம்பிக்கட கனவு நிறைவேறினால்தான் இதுசாத்தியம் பாப்பமே அவரிட சாத்திரம் பலிக்குமா எண்டத இருந்து பாப்பம்.

# நிலத்தில் புதைத்துவைத்திருந்த நிலையில் நான்கு இலட்சம் மில்லிலீற்றர் கோடா மீட்பு

## வாழைச்சேனையில் நால்வர் கைது

*(கனகராசா சரவணன்)*

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள யூனியன் கொலனி பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை மாவட்ட புலனாய்வு பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து வியாழக்கிழமை (08) முற்றுகையிட்டபோது நிலத்தில் கலன்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 4 இலட்சம் மில்லிலீற்றர் கோடாவை மீட்டதுடன் பெண்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம், குறித்த பிரதேசத்தில் வீடுகளில் கசிப்பு உற்பத்தி செய்துவரும் நிலையங்களை சம்பவதினம் மாலை பொலிஸாருடன் புலனாய்வு பிரிவினர் இணைந்து முற்றுகையிட்டனர்.

இதன்போது வீட்டின் அருகிலுள்ள பாழடைந்த காணியின் நிலத்தை தோண்டி அங்கு கலன்களில் கசிப்பு உற்பத்திக்கான கோடாவை புதைத்து வைத்திருந்த நிலையில் அவற்றை தோண்டி எடுத்தனர்.

இவ்வாறு நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 4 இலட்சம் மில்லி லீற்றர் கோடாவை மீட்டதுடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட உறவினர்களான அருகருகே அமைந்துள்ள வீடுகளைச் சோந்த 30, 40, 35, 50 வயதுடைய நான்கு பெண்களை கைது செய்தனர். இதில் கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# சாய்ந்தமருது தைபா அரபுக் கல்லூரிக்கான நேர்முகப் பரீட்சை 17, 18ஆம் திகதிகளில்

*(சாய்ந்தமருது செய்தியாளர்)*

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகளை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை சாய்ந்தமருது, பொலிவேரியனில் அமைந்துள்ள கல்லூரியின் அதிபர் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை எழுதிய, அல்-குர்ஆனை நன்கு ஓதத் தெரிந்த, ஆர்வமுள்ள மாணவிகள் நேர்முகப் பரீட்சையில் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்ற சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் மௌலவியா பட்டத்துக்கான அல்ஆலிம் இஸ்லாமிய கற்கை நெறியுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப்படுகின்றனர் என்று கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இதுவரை 39 மாணவிகள் இக்கல்லூரியில் இருந்து மௌலவியாக பட்டம் பெற்றுள்ளனர். இவர்களுள் பல மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்று, உயர் கல்வி கற்று வருவதுடன் கற்கைகளை பூர்த்தி செய்த சிலர் பல்கலை பட்டம் பெற்று வெளியேறியுமுள்ளனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கெக்கரிக்காய் பதனிடும் நிலையத்துக்கு ஆளுநர் விஜயம்

*(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)*

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாகரை பிரதேசத்தின் மாங்கேணியில் அமைந்துள்ள கெக்கரிக்காய் பதனிடும் நிலையத்துக்கு நேரில் சென்று நிலைமைகளை கண்டறிந்து கொண்டார்.

இவருடன் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் விவசாய அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டுக்கு அதிகளவு அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் வர்த்தகமாகவும் பெரும் இலாபம் ஈட்டித் தரும் பயிர்ச்செய்கையாகவும் பச்சை கெக்கரிக்காய் வாகரை பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுகின்றது. அத்துடன் 45இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு சந்தைப்படுத்துவதற்காக ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் இதன்போது ஆளுநரிடம் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் விளக்கமளிக்கப்பட்டது.



குறிப்பாக ஜப்பான் போன்ற நாட்டுக்கு அதிகளவில் சந்தை வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. கெக்கரிக்காய் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும் வசதியினை உற்பத்தியாளருக்கு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய அரச உதவித்திட்டங்களை மேற்கொள்வதுடன் உற்பத்தியாளர்களின் நஷ்டத்தில் இலாபம் உழைக்காத வகையில் விலை நிர்ணயம் மற்றும் அளவு பெரிதான கெக்கரிக்காய்களை கொள்வனவு செய்யாமல் கழிவாக்கப்படும் விடயங்களை தவிர்ப்பதற்காக உள்ளூர் சந்தைப்படுத்தலுக்கு உட்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக எதிர்வரும் புதன்கிழமையன்று தொழிற்சாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு பணித்தார். உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்களது குறை நிறைகளை ஆளுநருடனான கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

குறித்த பயிர்ச்செய்கையின் போது அதிகளவு மின்சாரம் தேவைப்படுவதாகவும் அதனால் தங்களது உற்பத்தியில் ஈட்டும் இலாபத்தின் பெரும்பகுதியினை மின்சார கட்டணத்துக்கு செலுத்துவதாகவும் அதனை தவிர்க்க சூரிய மின்சக்தி கருவிகளை பெற்றுத் தருமாறு கெக்கரிக்காய் உற்பத்தியாளர்கள் ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் காயம்

*(சீனக்குடா செய்தியாளர்)*

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கண்டல்காடு கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்தகாயங்களுக்குள்ளாகிய நிலையில் கிண்ணியா தளவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை(11) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். கிண்ணியா மகாமாறு பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானவராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, சம்பவதினத்தன்று காலை இவர் தனது வீட்டிலிருந்து, மோட்டார் சைக்கிளில் கண்டல்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள, மகாவலி கங்கை கொட்டியாரகுடாவில் மீன்பிடிக்கச் சென்றபோதே தாக்குதலுக்குள்ளானதாகவும் அவர் சென்ற மோட்டார் சைக்கிளும் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காட்டு யானைகளின் தாக்கத்தினால் சொத்தழிவுக்குள்ளான மாவடிப்பள்ளி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பயனாளிகள் இருவருக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகளை காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் அண்மையில் வழங்கி வைத்தார். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான செயலமர்வு



*(திகாமடுல்ல செய்தியாளர்)*

அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிலைபேறான அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் அனர்த்த முகாமைத்துவத்தை உள்ளடக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் செயலமர்வு வியாழக்கிழமை அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. எம்.றியாஸ் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில் அக்கறைப்பற்று பிரதேச செயலாளர் அன்சார், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அஸ்லம் சஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அதனை கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பிலும் வளவாளர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும், உலகளவில் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் நாடுகள் வரிசையில் இலங்கை ஐந்தாம் இடத்தை வகிப்பதாக சுட்டிக் காட்டப்பட்டதுடன் அம்பாறை மாவட்டத்தில் திட்டமிடப்படாத பாதை அபிவிருத்தி வேலைத்திட்டங்களே பாரிய வெள்ள அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன்போது தெரிவித்தனர்.



**காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு சிறுவர் பாதுகாப்பு குழு மற்றும் பால் நிலை சார் வன்முறைக்கெதிரான செயலணிக் குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு அபிவிருத்தி வலுவூட்டல் தொடர்பாக காரைதீவு பிரதேச சபை செயலாளர், பொலிஸ் நிலைய அதிகாரிகள் உட்பட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் எதிர்ப்புப்பேரணி




*(பாறுக் ஷிஹான்)*

சாய்ந்தமருது பிரதேசத்தில் சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் முழு அனுசரணையில் 'புகைத்தலில் இருந்து மீண்ட ஒரு கிராமம்' எனும் தொனிப்பொருளில் மாபெரும் எதிர்ப்புப் பேரணி சனிக்கிழமை(10) சாய்ந்தமருது ஸாஹிராக் கல்லூரி வீதி முன்றலிலிருந்து ஆரம்பித்து பிரதான வீதி வழியாகச்சென்று மாளிகா சந்தியில் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியின்போது கிழக்கு நட்புறவு ஒன்றியத்தினால் அச்சிடப்பட்ட விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் வர்த்தக நிலையங்களில் ஒட்டப்பட்டதுடன் புகைத்தல் எதிர்ப்பு தின கொடி விற்பனையும் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குபூரண ஒத்துழைப்பினை சாய்ந்தமருது பிரதேச வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் வழங்கியதுடன் மக்களுக்கு விழிப்பூட்டும் பிரசாரங்களும் இடம்பெற்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம்.நசீர், நிர்வாகப் பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம்.பைசர், நிதிப் பணிப்பாளர் முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எ.சலீம், சாய்ந்தமருது - மாளிகைக்காடு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் ஏ.எம்.ஹிபத்துல் கரீம், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எ.நஜீம் உள்ளிட்ட பிரதேச செயலக உயர் அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்புகளின் பிரதிநிதிகள், கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உயர்தர வகுப்புகளை 30ஆம் திகதிவரை தாமதப்படுத்துங்கள்

## மாநகர ஆணையாளர் அறிவுறுத்தல்

*(பாறுக் ஷிஹான்)*

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான புதிய மேலதிக வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், இம்மாத இறுதிவரை தாமதப்படுத்துமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி வலியுறுத்தியுள்ளார்.



இவ்விடயம் தொடர்பாக அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்தி அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பல்வேறு அர்ப்பணிப்புகள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையினை நிறைவுசெய்திருக்கின்ற மாணவர்களும் பெற்றோர் மற்றும் கல்விச் சமூகத்தினரும் எம்மிடம் சுட்டிக்காட்டியமைக்கு அமைவாக, தங்களது கல்வி நிறுவனங்களினால் புதிய க.பொ.த. உயர்தரத்துக்கான மேலதிக நேர வகுப்புகளை மிக அவசரமாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது.

க.பொ.த. உயர்தர கல்வியானது மாணவர்களது முற்றுமுழுதான எதிர்காலத்தினை தீர்மானிக்கின்ற மிகப் பிரதான சந்தர்ப்பமாக காணப்படுகின்றது என்பதனை தாங்களும் அறிந்த வகையில், உயர்தரக் கல்விக்கான தத்தமது துறைகளை தேர்வு செய்வதற்காக மற்றும் உரிய தயார்படுத்தல்களுக்காக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் போதிய கால அவகாசமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே, மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை தங்களது கல்வி நிலையங்களில் புதிய க.பொ.த. உயர்தரத்துக்கான வகுப்புகளை ஆரம்பிக்காது இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இது தொடர்பில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடனான வியாபார உத்தரவுப்பத்திரத்தின்பால் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவதோடு தவறும் பட்சத்தில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்பதையும் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கல்முனை மாநகர ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கதிர்காமம் காட்டுப்பாதை இன்று திறப்பு

*(பாண்டிருப்பு, ஆலையடிவேம்பு செய்தியாளர்கள்)*

கதிர்காமம் ஆடிவேல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து அதிகளவிலான பக்தர்கள் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு பாதயாத்திரையில் ஈடுபட்ட பக்தர்கள் கதிர்காமத்துக்கு காட்டுப் பாதை ஊடாக பயணிப்பதற்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் ஒன்று கூடியுள்ளனர். இந்நிலையில் கதிர்காமம் காட்டுப்பாதை இன்று திங்கட்கிழமை 12ஆம் திகதி காலை 7 மணிக்கு திறக்கப்பட்டு எதிர்வரும் 24ஆம் திகதி மாலை 3 மணியுடன் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அம்பாறை மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. கதிர்காமம் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 4ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

# அமேசன் காட்டுக்குள் சிக்கிய 4 குழந்தைகள்: 40 நாட்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்பு

## உயிர்பிழைத்தது எப்படி?

கொலம்பியாவில் அமேசன் வனப்பகுதியில் விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து தப்பித்த குழந்தைகள் நான்கு பேர் அடர்ந்த வனப்பகுதியில் தொலைந்துபோன நிலையில், 40 நாட்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டு உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளனர்.

குழந்தைகள் நான்கு பேரும் உயிருடன் மீட்கப்பட்டதை கொலம்பியா ஜனாதிபதி கஸ்டாவோ பெட்ரோ (Gustavo Petro) உறுதி செய்துள்ளார். அமேசன் மலைக்காடுகளின் அடர்த்தியான பகுதிகளில் சிக்கிய அந்த நான்கு குழந்தைகளும் பத்திரமாக மீட்கப்பட்டதற்காக அந்நாட்டு மக்கள், மகிழ்ச்சியும் அரசுக்கு நன்றியும் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி பெட்ரோ தனது டுவிட்டர் பக்கத்தில்,

''கொலம்பிய காடுகளில் கடந்த 40 நாட்களுக்கு முன்னர் மாயமான குழந்தைகள் 4 பேரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இது தேசத்திற்கான மகிழ்ச்சிச் செய்தி'' - என பதிவிட்டுள்ளதுடன், இந்த மீட்புப் பணியில் ஈடுபட்ட பூர்வக்குடிகள் மற்றும் இராணுவத்தினரின் புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார்.







அத்தோடு ''மீட்கப்பட்ட 4 குழந்தைகளும் அந்தத் தருணத்தில் மிகவும் சோர்ந்துபோய், அச்சத்துடன் காணப்பட்டனர். இருப்பினும், அந்த 4 குழந்தைகளும் மனிதர்கள் எத்தகைய நெருக்கடிகளுக்கிடையேயும் வாழமுடியும் என்பதற்கான முன் உதாரணமாக - அடையாளமாக இருப்பார்கள். அவர்களின் கதை வரலாறாகும்'' - எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட குழந்தைகளின் விவரம் வருமாறு:-

லெஸ்லி ஜேகோபோம்பேர் (வயது 13), சோலோனி ஜேகோபோம்பேர் முகுடி (வயது 9), டியன் ரனோக் முகுடி (வயது 4) மற்றும் கைக்குழந்தையான கிறிஸ்டின் ரனோக் முகுடி ஆகிய 4 குழந்தைகளே இவ்வாறு 40 நாட்களுக்குப் பின்னர் மீட்கப்பட்டுள்ளனர்.



குழந்தைகள் உயிர்பிழைத்தமை குறித்து குழந்தைகளின் மாமாவான பிடென்ஸியா என்பவர் தெரிவிக்கையில்,

''மலைக்காடுகளில் கிடைக்கும் பழங்கள், குடிநீர் மற்றும் மரவள்ளிக்கிழங்கு மா போன்றவற்றை உணவாக எடுத்துக்கொண்டதாலேயே குழந்தைகள் உயிர்ப்பிழைத்துள்ளனர்'' என அவர் தெரிவித்துள்ளார்.

கொலம்பியாவிலிருந்து அமேசன் காட்டின் மேல் கடந்த மே முதலாம் திகதி ஒற்றை இன்ஜின் கொண்ட சிறிய ரக விமானமொன்று ஆறு பயணிகள் மற்றும் விமானி உட்பட 7 பேருடன் பறந்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானது.

இதில் குழந்தைகளின் தாய் மேக்டலீனா முகுடி வேலன்சியா, விமானி மற்றும் பூர்வக்குடி இனத் தலைவரொருவர் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அந்த விமானத்தின் பாகங்கள் சிதறிக்கிடந்த பகுதியில் 3 சடலங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால், விமானத்தில் பயணித்திருந்த ஏனைய நால்வரின் நிலை குறித்து என்னவென்று தெரியவில்லை. அதனையடுத்து அப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

விபத்து நடந்த பகுதியிலிருந்து வெகு தூரத்தில் குழந்தைகளின் ஆடைகள், பால் போத்தல் போன்றவை கண்டெடுக்கப்பட்டன. இதனால் குழந்தைகள் உயிருடன் இருக்க வாய்ப்பிருக்கலாம் என்று கருதி இராணுவம் தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டது.

அமேசன் காடுகள் மிகவும் அடர்ந்தவை என்பதால் பூர்வக்குடிகளின் துணை இல்லாமல் அங்கே தேடுதல் வேட்டை சாத்தியப்படாது. அதனால், இராணுவம் பூர்வக்குடிகளின் உதவியை நாடியது. அவர்களும் உதவிக்கரம் நீட்ட 40 நாட்களுக்குப் பின்னர் 4 குழந்தைகளும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தப் பணியில் ஏராளமான தன்னார்வலர்களும் இணைந்து கொண்டனர்.

கொலம்பிய ஊடகங்கள் இது தொடர்பான அன்றாட தகவல்களைப் பகிர்ந்துவர ஒட்டுமொத்த தேசமும் குழந்தைகள் பத்திரமாக மீட்கப்பட வேண்டுமென்ற ஆவலைத் தெரிவித்தன.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (09) மீட்கப்பட்ட குழந்தைகளின் புகைப்படங்களை கொலம்பிய அரசு பகிர்ந்தது. பரிதாபமாக காட்சியளித்த அந்த 4 குழந்தைகளுடன் இராணுவ வீரர்கள், பூர்வக்குடிகள், தன்னார்வலர்கள் இருந்தனர். அமேசன் காட்டில் 40 நாட்கள் தாக்குப்பிடித்த குழந்தைகளுக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

எதிர்காலத்தில் இந்தக் கதை ஒரு ஹொலிவுட் படமாகக்கூட மாறலாம் என்று இணையவாசிகள் குழந்தைகள் மீட்புப் படத்தின் கீழ் கருத்துகளைப் பகிர்ந்துள்ளனர்.

உலக செய்திகள்

# ட்ரம்பிடம் அணு ஆயுதங்கள் குறித்த இரகசிய ஆவணங்கள்

## நாளை மியாமி நீதிமன்றில் நேரில் ஆஜராகுமாறு உத்தரவு



### குற்றம் நிரூபிக்கப்பட்டால் 100 ஆண்டுகள்வரை சிறைத்தண்டனை

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் (வயது 76) அணு ஆயுதங்கள் தொடர்பான இரகசிய ஆவணங்கள் மற்றும் அரசின் முக்கிய இரகசிய ஆவணங்களை தன் தனிப்பட்ட பங்களா, குளியலறை உள்ளிட்ட இடங்களில் பதுக்கி வைத்திருந்ததாக, புகைப்பட ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான வழக்கில், நாளை(13) மியாமி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகுமாறு ட்ரம்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் கடந்த 2017 ஜனவரி முதல் 2021 ஜனவரி வரை அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

அவர் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறியபோது அரசின் இரகசிய ஆவணங்களை எடுத்துச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக கடந்த ஆண்டு ஓகஸ்டில் ட்ரம்பின் வீடு, அலுவலகங்களில் எப்.பி.ஐ. புலனாய்வு அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது 11,000 அரச ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதில் 100 ஆவணங்கள் அமெரிக்க அரசின் இரகசிய ஆவணங்களாகும்.

இதன்பேரில் ட்ரம்ப் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது. இந்தச் சூழலில் அமெரிக்காவின் மியாமி நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை (07) அவர் மீது 7 பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டது.

இந்தப் பிரிவுகளில் அவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 100 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது. நாளை (13) செவ்வாய்க்கிழமை மியாமி நீதிமன்றத்தில் ட்ரம்ப் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸுக்கு பணம் கொடுத்த விவகாரம் தொடர்பாக ட்ரம்ப் மீது ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது அரசின் இரகசிய ஆவணங்களை எடுத்துச் சென்ற விவகார வழக்கிலும் அவர் சிக்கியுள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ட்ரம்ப் திட்டமிட்டுள்ள நிலையில், இந்த வழக்குகள் அவருக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# முதல்முறையாக சம்பியனான மென்செஸ்டர் சிட்டி



E சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் இண்டர் மிலன் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய மென்செஸ்டர் சிட்டி முதன்முறையாக சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நடப்பாண்டு சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டி துருக்கி நாட்டில் இஸ்தான்புல்லில் உள்ள அட்டாடர்க் மைதானத்தில் நேற்று நள்ளிரவு நடைபெற்றது. இதில் இரண்டாவது பாதியின் 68 ஆவது நிமிடத்தில் கர்லிங் ஷாட் மூலம் அற்புதமான கோல் அடித்த ரோட்ரி, மென்செஸ்டர் அணியை முன்னிலை பெறச் செய்தார். இறுதியில் மான்செஸ்டர் சிட்டி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் கிளப் தொடங்கிய 143 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்றுள்ளது மென்செஸ்டர் சிட்டி. பெப் கார்டியோலா தலைமையிலான அந்த அணி நடப்பாண்டில் பிரீமியர் லீக், எஃப்.ஏ. கிண்ண மற்றும் சம்பியன்ஸ் லீக்கை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் உலகின் சம்பியனாக மகுடம் சூடிய அவுஸ்திரேலியா

## இந்தியாவின் 10 ஆண்டு கனவு சிதைந்தது




2021 – 2023ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியனாக பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலியா மகுடம் சூடியது.

இந்திய அணியுடனான டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் 209 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி, நியூசிலாந்துக்கு அடுத்ததாக இரண்டாவது அணியாக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றியது.

இரு வருடங்கள் நடைபெற்ற சர்வதேச டெஸ்ட் போட்டிகளுக்கான சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை லண்டனின் உள்ள த ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது. இதில் இந்திய – ஆஸி. அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியின் ஆரம்பத்திலிருந்து ஆஸி. அணியின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. இந்திய அணிக்கு 444 ரன்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பதிலெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸை விடவும் மோசமாக 234 ஓட்டங்களுக்குள் சுருண்டு போக ஆஸி. அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை தட்டித்தூக்கியது. இதன் மூலம் ஐ.சி.சி உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் இந்தியாவின் 10 ஆண்டு காத்திருப்பு வீண் போனது. போட்டியின் ஆட்டநாயகனாக ட்ரெவிஸ் ஹெட் தெரிவானார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# டயலொக் பாடசாலை ரக்பி லீக் - 2023 போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பம்



பாடசாலை அணிகளுக்கிடையிலான டயலொக் பாடசாலை ரக்பி லீக் - 2023 போட்டிகள் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகின்றன. கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் குழு 1 ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள கொழும்பு புனித ஜோசப் கல்லூரி - புனித அந்தோனியார் கல்லூரி பலப்பரீட்சை நடத்துகின்றன.

இரண்டாவது போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இதே மைதானத்தில் கண்டி வித்யார்த்த கல்லூரி - விஞ்ஞானக் கல்லூரி ஆகியன பலப்பரீட்சை நடத்துகின்றன. முதல் வாரத்தில் இரண்டு முக்கியமான ஆட்டங்கள் ஜூன் மாதம் 17 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளன, இதில் முன்னாள் சம்பியனான ரோயல் கல்லூரி மற்றும் புனித பீட்டர்ஸ் கல்லூரி பம்பலப்பிட்டியில் உள்ள புனித பீட்டர்ஸ் கல்லூரி மைதானத்தில் நேருக்கு நேர் மோதுகின்றன.

கொழும்பு இசிப்பத்தன கல்லூரி, கொழும்பு புனித பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு புனித ஜோசப் கல்லூரி, கொழும்பு ரோயல் கல்லூரி, புதின தோமஸ் கல்லூரி, கல்கிசை மற்றும் கண்டி டிரினிட்டி கல்லூரி ஆகியவை இந்த சீசனுக்கான முக்கிய அணிகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Dialog
SCHOOLS
RUGBY

# மூன்றாவது முறையாக பிரெஞ்ச் ஓபன் சம்பியனான இகா



ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியனாக போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் தெரிவானார். இதன் மூலம் 3 ஆவது முறையாக இகா ஸ்வியாடெக் பிரெஞ்ச் ஓபன் சம்பியன் பட்டத்தை வென்றார்.

நான்கு வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டி ஆண்டுதோறும் நடந்து வருகிறது. இதில் இரண்டாவதாக நடைபெறும் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக், செக் குடியரசு வீராங்கனை கரோலினா முச்சோவாவுடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இகா ஸ்வியாடெக், 6-2, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் முச்சோவாவை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

# கல்குடாவில் போதைப் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி



**(ராஷீக் எம். மஹாரிம்)**

கல்குடா டைட்டன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வீரர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து 'விளையாட்டின் மூலம் போதையில் இருந்து விடுபடுவோம்' எனும் தொனிப்பொருளில் நட்புறவு ரி- 20 கிரிக்கெட் போட்டி கல்குடா டைட்டன் லயன்ஸ் மற்றும் கால்குடா டைட்டன் பாய்ஸ் அணிகளுக்கிடையில் அண்மையில் வாழைச்சேனை வி.சி. பொது மைதானத்தில் நடைபெற்றது. இதில் லயன்ஸ் அணி வெற்றியீட்டியது.

இவ்வாறான செயல்களின் மூலம் போதைப் பாவனையிலிருந்து இளைஞர்களை மீட்டு விளையாட்டின் மீது ஈர்ப்பு ஏற்படுத்தி அவர்களின் திறன்களை வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்தப் போட்டி அணியின் தலைவர் மொஹமட் பஜீரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடனும் கழக உறுப்பினர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பின் கீழும் வெற்றிகரமாக இடம்பெற்றது.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7